Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 ஐப்பசி 8 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 ஷஃபான் 18 (25.10.2002) வெள்ளிக்கிழமை இதழ் : 25

THAMPI links with LIONAIR

உங்களின் சௌகரியமான பயணத்திற்குப் பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட

BRITISH AEROSPACE HS 748 Aircraft............

ROLLS ROYCE ENGINES...........

SAFETY & COMFORT.........

WARM HOSPITALITY..........

Tickets Available For RS. 1999/-

விசாரணைகளுக்கு அழையுங்கள்....

01-343125

021-2222504

Hotline - 0777-382343, 072-401423.

(சி-052)

## கும்பலால் பாலியல் வல்லுறவுக்குள்ளான குடும்பப்பெண் வவுனியாவில் படுகொலை!

### ஆடு மேய்க்கச் சென்றவேளை நடந்த கொடூரம்

(வவுனியா, கொழும்பு நிருபர்கள்)

வவுனியா, கல்லுண்டான் குளத்தைச் சேர்ந்த 42 வயதான குடும்பப் பெண் ஒருவர், ஒன்றுக்கு மேற்பட்டோரினால் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்ட பின் கழுத்தை நெரித்துப் படுகொலை செய்யப்பட்டார்.

இவரது சடலம் வவுனியாவிலுள்ள இராணுவ முகாமொன்றுக்கு அண்மையான காட்டுப் பகுதியில் நேற்றுக் கண்டெடுக்கப்பட்டது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

வவுனியா கல்லுண்டான் (10ஆம் பக்கம் பார்க்க)

## கத்திக்குத்துக் காயத்துடன் இளைஞர் சடலம் மட்டு.நகரில்.

(நமது நிருபர்)

மட்டக்களப்பு பகுதியில் கைகள் பின்புறமாகக் கட்டப்பட்ட நிலையில் கழுத்தில் கத்திக்குத்துக் காயங்களுடன் நேற்றிரவு இளைஞனின் சடலமொன்று காணப்பட்டது.

மட்டக்களப்பு நகரின் கண்ணகையம்மன் கோயில் வீதியில் நேற்றிரவு 9 மணிக்கு இச்சடலம் கண்டுபிடிக்கப்பட்டு வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டது.

இச்சடலம் நேற்றிரவு வரை அடையாளம் காணப்படவில்லை. இக்கொலைச் சம்பவத்துடன் அரசியல் தொடர்பிருக்கலாம் என நம்பப்படுவதாகவும் இதுதொடர்பான விசாரணைகளை பொலீஸார் மேற்கொண்டு வருவதாகவும் மட்டக்களப்பிலிருந்து கிடைக்கும் செய்திகள் மேலும் தெரிவித்தன.

### விண்ணாணம் விநாசியர்



எந்த அதிகாரமும் சனத்திண்ட பவருக்கு முன்னால தூசுதான்...

# உண்மையான சமாதானம் இன்னமும் ஏற்படவில்லை!

## இஸ்ரேல் விசாரணைக் குழு நேற்று கொழும்பு வந்தது

கிபிர் விமான விபத்து தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளவென இஸ்ரேல் இராணுவ அதிகாரிகள் கொண்ட குழுவொன்று நேற்று கொழும்பு வந்து சேர்ந்துள்ளது.

இக்குழுவினர் இன்று குளியாப்பிட்டிய பகுதிக்குச் சென்று விசாரணைகளை ஆரம்பிப்பர்.

இதேவேளை - சிறிலங்கா விமானப்படை இதுவரை நான்கு கிபிர் விமானங்களை இழந்துள்ளதாகவும் இன்னமும் 10 விமானங்கள் விமானப் படையின் பாவனையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## விரைவில் எனது அதிகாரத்தைப் பயன்படுத்துவேன் நாட்டு மக்களுக்கான உரையில் ஜனாதிபதி சந்திரிகா

(கொழும்பு)

**தற்போது ஏற்பட்டிருப்பது உண்மையான சமாதானமல்ல. போர்நிறுத்தம் மட்டுமே இப்போது நடைமுறையில் உள்ளது என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்றைய தொலைக்காட்சி உரையில் தெரிவித்தார்.**

தற்பொழுது நடைமுறையில் இருக்கும் புரிந்துணர்வு உடன்படிக்கை மூலமான போர் நிறுத்தம், ஒரு தரப்புக்கு மட்டும் நன்மை பயக்கும் விதத்தில் அத்தரப்புக்கே சாதகமாக இருக்கிறது என்று நேற்றிரவு தொலைக்காட்சி வழியாக நாட்டு மக்களுக்கு உரை நிகழ்த்திய ஜனாதிபதி சந்தி (10ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் நடத்த ரணில் கோரினால் ஜனாதிபதி புதிய பிரதமரை நியமிப்பார்

### அனுரா பண்டாரநாயக்க எச்சரிக்கை

பொதுத்தேர்தல் ஒன்றை நடத்துமாறு பிரதமர் ஜனாதிபதிடம் கேட்டுக்கொண்டால் புதிய பிரதமர் ஒருவரை ஜனாதிபதி நியமிப்பார் என்று பொதுஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் அனுரா பண்டாரநாயக்க கூறியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியில் உள்ள சிலர் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு ஆதரவு வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

அரசின் தனியார் மயமாக்கல், தொழிலாளர்களின் உரிமைகளைப் பறித்தல் ஆகியவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நுகேகொடையில் நேற்று முன்தினம் நடந்த கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

## இரண்டாம் கட்டப் பேச்சுக்கள் 'நொகன்பத்தம்' நகருக்கு மாற்றம்!

(கொழும்பு நிருபர்)

தாய்லாந்தில் நடைபெறவுள்ள இரண்டாம் கட்டப் பேச்சுக்கள் சென்ற முறை போல் 'சட்டாகிப்' நகரில் நடைபெறாது என தாய்லாந்து அரசாங்க வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

இம்முறை தாய்லாந்தின் தலைநகர் பாங்கொக்கிலிருந்து சுமார் 55 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள 'நொகன்பத்தம்' (Nokhanbathom) என்னுமிடத்திலேயே பேச்சுக்கள் நடைபெறவிருக்கின்றன.

இப்புதிய இடம் தாய்லாந்து பாதுகாப்பு உயரதிகாரிகளினால் சிபாரிசு செய்யப்பட்டுள்ளதாகவும், பேச்சுக்களுக்கான ஆயத்தங்கள் அங்கு மேற்கொள்ளப்படுவதாகவும் தெரியவருகின்றது.

## அரசாங்கத் தரப்பிலும் மூத்த படை அதிகாரி?

(கொழும்பு நிருபர்)

இந்த மாத இறுதியில் ஆரம்பமாகவுள்ள இரண்டாம் கட்டப் பேச்சுக்களில் விடுதலைப் புலிகள் தரப்பில் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களின் சிறப்புத் தளபதி கேணல் கருணா கலந்துகொள்ளவுள்ளதால் - அதற்கேற்ற வகையில், அரச குழுவிலும் சிரேஷ்ட படையதிகாரி ஒருவர் இடம்பெறலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அடுத்த கட்டப் பேச்சுக்களில் கிழக்கு மாகாண நிலவரம் தொடர்பாகவும் படைத் துறையுடன் சம்பந்தப்பட்ட உயர்பாதுகாப்பு வலயங்கள் நீக்கப்படுவது பற்றியும் பேசப்படவுள்ளதாலேயே அதற்கேற்ற வகை (10ஆம் பக்கம் பார்க்க)

## அரசு - புலிகள் செயலணி ஜனாதிபதிக்கு தெரியாதாம்

விடுதலைப்புலிகளும் ரணில் அரசாங்கமும் தத்தமது பிரதிநிதிகளின் பங்களிப்புடன் உருவாக்கப் போகும் கூட்டுச் செயலணியைப் பற்றி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கு எவ்விடயமும் அறிவிக்கப்படவில்லை என்று முன்னாள் வெளிவிவகார அமைச்சரும் ஜனாதிபதியின் ஆலோசகருமான லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசனுடனான சந்திப்பை ஜனாதிபதி இரத்துச் செய்திருந்தமைக்கான பிரதான காரணம் நோர்வே- உள்நாட்டு விவகா (10ஆம் பக்கம் பார்க்க)

### சாவகச்சேரியில் மூன்று ஷெல்கள் படையினரால் மீட்பு

சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் காணப்பட்ட மூன்று மோட்டார் ஷெல்கள் நேற்றுமுன்தினம் இராணுவத்தினரால் அகற்றப்பட்டன.

இக்கல்லூரிச் சுற்றாடலில் காணப்பட்ட ஷெல்கள் குறித்து இராணுவத்தினரிடம் தெரிவித்ததை அடுத்து இந நடவடிக்கை எடுக்கப்பட்டது. (29)

### தீவகத்தில் எழுந்த வெடிச்சத்தங்கள்

நேற்று நள்ளிரவும் இன்று அதிகாலையுமாக தீவகப் பகுதியில் கடற்பிரதேசங்களில் சராமாரியான துப்பாக்கி வேட்டுச்சத்தங்களும் குண்டுச்சத்தங்களும் கேட்டுக் கொண்டிருந்தன.

கடற்படையினர் புங்குடுதீவுப் பகுதியில் பயிற்சியில் ஈடுபட்டிருந்ததால் இச்சத்தங்கள் எழுந்ததாக பின்னர் தெரியவந்தது.

### இரு செயலணி குழுக்கள் முஸ்லிம் காங்கிரஸ் கோரிக்கை

விடுதலைப் புலிகளும் அரசாங்கமும் இணைந்து அமைக்கவுள்ள கூட்டுச்செயலணி, வடக்கு மாகாணம், கிழக்கு மாகாணம் ஆகிய இரண்டு மாகாணங்களுக்கும் தனித்தனியான இரண்டு உப செயலணிக் குழுக்களைக் கொண்டதாக அமைய வேண்டும் என்று பிரதமர் ரணிலிடம் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.



நுகேகொடையில் நடந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சி - பொதுஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகள் இணைந்து நடத்திய அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் பங்குபற்றிய மங்கள சமரவீர, எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அனுரா பண்டாரநாயக்க ஆகியோரைப் படத்தில் காணலாம்.

உள்ளே - இன்றைய சிறப்பிதழ் சிநேகிதியே..., திருமாவளவனுடன் விசேட நேர்காணல்

# மாணவர் போராட்டமென்ற போர்வையில் பலாத்காரம் பிரயோகிக்கப்படக் கூடாது!

## மத்திய கல்லூரி பகிஷ்கரிப்பு தொடர்பாக அதிபர்

எந்தப் பிரச்சினையும் பேசித் தீர்க்கப்பட வேண்டிய ஒன்றே தவிர மாணவர் பேராட்டம் எனும் போர்வையில் பலாத்காரம் பயன்படுத்தப்படுவதை சகல சக்திகளும் தடுத்து நிறுத்த வேண்டும் என யாழ். மத்திய கல்லூரி அதிபர் க.இராசதுரை கல்லூரி மாணவர் பகிஷ்கரிப்பு தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் தொிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கல்லூரியில் நான் இல்லாது, கடமையின் நிமித்தம் கொழும்பு சென்றசமயம் பார்த்து சில மாணவர்கள் கல்லூரியில் பகிஷ்கரிப்பு என்ற போர்வையில் தமது சுயநல செயற்பாடுகளுக்காக மேலும் சில மாணவர்களை துணைக்கழைத்து செயற்பட்ட விதம் குறித்து மிகவும் மனவேதனையடைகின்றேன்.

அதிபர் என்ற நிலையில் என்னிடம் இதுவரையும் எந்தவித கோரிக்கையையும் முன்வைக்காது நான் இல்லாத நேரம் பார்த்து கல்லூரிக்கு எதிரான ஒரு சக்தி பின்னிற்க இந் நிகழ்வு நடந்துள்ளதாக நான் உணர்கின்றேன்.

கல்லூரிக்கு வருகை தருகின்ற மாணவர்களை பலாத்காரமாக தடுத்து நிறுத்தும் முயற்சிகளும் நடந்துள்ளதாக அறிகின்றேன்.

ஒழுக்கத்திலும், கல்வியிலும் அபிவிருத்தியிலும் விரைவாக உயர்ந்து வருகின்ற எமது கல்லூரி வளர்ச்சியை கல்லூரிச் சமூகமும், தமிழ் மக்களும் நன்கறிவர். இவற்றுக்கு தடையாகவோ அல்லது வேறு எந்த விதத்திலுமோ செயற்படும் யாரையும் எமது கல்விச் சமூகம் இனங் காணவேண்டும்.

பதவியின் காரணமாகவோ, அல்லது அதிகாரத்தின் காரணமாகவே அதிபரோ அன்றி ஆசிரியர்களோ முறை தவறி, அன்றி பிழையாக நடபபதை உரிய துறைகள் மூலம் சுட்டிக்காட்டி உரிய நடவடிக்கை எடுக்க சகலருக்கும் உரிமை உண்டு என்பதனை இத்தால் தெரியப்படுத்துகின்றேன்.

இதை யாரும் தமது கையில் ஆயுதமாக எடுத்து தமது சுயநலனை இதனூடாக தீர்க்க முனையக்கூடாது என்பதனையும் மிகத் தாழ்மையாகத் தெரியப்படுத்துகின்றேன். இதற்காக இன்று கல்லூரியில் விசேடமாக கூட்டப்படும் பெற்றோர்களுக்கான கூட்டத்தில் சகல பெற்றோர்களும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றேன் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### அதிபரை மாற்ற கோரவில்லை

தாம் நடத்திய பகிஷ்கரிப்பு பேராட்டத்தில் ஒரு கோரிக்கையாக அதிபரை மாற்றும்படி கேட்கவில்லை என மத்திய கல்லூரி மாணவர் தரப்பில் நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.


### சிறு விளம்பரம்

**மணமகள் தேவை**

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 27 வயதுடைய செவ்வாய்க் குற்றமற்ற 28 கிரகபாவமுடைய பட்டதாரி ஆசிரியருக்கும், 32 வயதுடைய செவ்வாய்க்குற்றமற்ற 42 1/4 கிரகபாவமுடைய பயிற்றப் பட்ட ஆசிரியருக்கும் படித்த, தகுதி வாய்ந்த மணமகள்களைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். ஜாதகக் குறிப்பு குடும்ப விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல.02, மே/பா. நமது ஈழநாடு.(019)

**வாடகைக்கு**

ஊட்டி வீடியோ சென்ரர்
OOTY VIDEO CENTRE
தரமான வீடியோப் பிரதிகள் வாடகைக்கு விடப்படும். 511 (161), மானிப்பாய் றோட், யாழ்ப்பாணம்.
(சி-079)


## சாரதி அனுமதிப் பத்திரம் பரீட்சையில் தோற்றியோருக்கு

(யாழ்ப்பாணம்)

சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவதற்காக - இம்மாதம் 13ஆம் திகதி தொடக்கம் 19ஆம் திகதி வரை பரீட்சைக்குத் தோற்றியவர்களுக்கான செயன்முறைப் பரீட்சைகள் நடைபெறவுள்ளனவென யாழ்.மாவட்ட மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் அறிவித்துள்ளது.

13ஆம் திகதி எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றியோருக்கான பரீட்சை முடிவு 27ஆம் திகதி வெளியிடப்பட்டு அன்றைய தினமே பி.ப. 2 மணிக்கு செயன்முறைப் பரீட்சை நடைபெறும்.

14ஆம் திகதி தொடக்கம் 19 ஆம் திகதிவரை எழுத்துப் பரீட்சைக்கு தோற்றியவர்களின் பரீட்சை முடிவுகள் 28ஆம் திகதி வெளியிடப்படும்.

14ஆம் திகதி எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றியோருக்கு 28ஆம் திகதி மு.ப 9 மணிக்கு செயன்முறைப் பரீட்சையும், 15, 16, 17, 18, 19 ஆகிய திகதிகளில் எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றியோருக்கு முறையே 28, 29, 30, 31 ஆகிய திகதிகளில் மு.ப 9 மணிக்கு செயன முறைப் பரீட்சையும், 4ஆம் திகதி எழுத்துப் பரீட்சைக்கு தோற்றிச் சித்தியடைந்தோருக்கான செயன்முறைப் பரீட்சை 27ஆம் திகதி மு.ப. 9 மணிக்கும் நடைபெறும்.

14ஆம் திகதி தொடக்கம் 17ஆம் திகதிவரை நடைபெறவிருந்த வாகனம் ஓட்டும் பரீட்சைக்குத் தோற்றத் தவறியவர்களுக்கான மீள் பரீட்சையும், வாகனம் ஓட்டும் செயன முறைப் பரீட்சையில் சித்தியடையாதவர்களுக்கான மீள் பரீட்சையும் 29ஆம் திகதி முதல் அடுத்த மாதம் முதலாம் திகதிவரை நடைபெறும்.

மீள் பரீட்சைக்குத் தோற்றுவோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களுடன் சாரதிகள் 9.30 மணிக்கு திணைக்களத்திற்கு சமூகமளிக்கும்படி மோட்டார் போக்குவரத்து திணைக்களம் கேட்டுள்ளது.

## யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் முக்கிய அறிவித்தல்

சகல பெற்றார்களும் இன்று அவசர கலந்துரையாடல் ஒன்றுக்கு மிக அவசியமாகவும், அவசரமாகவும் அழைக்கப்படுகின்றீர்கள்.

கல்லூரியில் கடந்த 22.10.2002ஆம் திகதி தொடக்கம் நடைபெறுகின்ற சில சம்பவங்களை ஒட்டி மிக முக்கியமாகக் கலந்துரையாடி முடிவு எடுக்க வேண்டியுள்ளதால் தயவுசெய்து இன்று (25.10.2002) வெள்ளிக்கிழமை 10.00 மணிக்கு உரிய நேரத்துக்கு வருகைதந்து எமது கல்லூரி மாணவர்களின் கல்விப் பாரம்பரியத்தையும், ஒழுக்கத்தையும் கட்டிக் காப்பதற்கு ஆலோசனை வழங்குமாறு வேண்டுகின்றேன்.

*யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி,*
*யாழ்ப்பாணம்.*
(சி-082)
க.இராசதுரை,
அதிபர்.


யாழ். நகரில் ஒரே இடத்தில் சகலவிதமான ஓவிய வேலைகள், பிளாஸ்ரிக் பெயர்ப் பலகைகள், கீ ரெக், பாடசாலைச் சின்னங்கள், மொனிட்டர், ப்(f)றிபெக்ட் பட்ஜ்களை செய்து பெற்றிட.

**யசோ ஆட்ஸ் பிளாஸ்ரிக்**

35, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

*கண் பரிசோதித்து கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ள, உறுதியான பற்களைக் கட்டுவதற்கு, மிதப்புப் பற்களுக்கு 'கிளிப்' செய்துகொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்:*

**றெனி பல் மூக்குக் கண்ணாடி அகம்**
**RENNY DENTAL OPTICALS SERVICE**


## இதய அஞ்சலி

வட. இலங்கைச் சங்கீத சபையின் நிர்வாகச் செயலாளராகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற

**மாணிக்கம் கந்தப்பு**

அவர்களின் மறைவு கேட்டு அதிர்ச்சியடைந்தோம். அமரரின் ஆத்மா சாந்தி பெற இறைஞ்சுகின்றோம். எமது ஆழ்ந்த அனுதாபங்களை அன்னாரின் குடும்பத்தினருக்குச் சமர்ப்பிக்கின்றோம்.

*வலயக் கல்வித் திணைக்களம்,*
*யாழ்ப்பாணம்.*
(சி-078)
வட.இலங்கைச் சங்கீத சபை.


**விஜய் வீடியோ சென்ரர்**

ஃபான்சி ஃபோட்டோ மற்றும் வீடியோ அனைத்துக்கும் நாட வேண்டிய இடம்.

**விஜய் வீடியோ சென்ரர்**
உரிமையாளர்,
பொன்.மதிமுகராஜா
விஜயகாந்த். (விஜய்)
கே.கே.எஸ். வீதி,
தாவடிச் சந்தி,
தாவடி.
(சி-083)


காரைநகரில்

## தொடரும் 'பாஸ்' முறை; மீனவர்கள் மீதும் கட்டுப்பாடு

(காரைநகர்)

காரைநகர் கிழக்குப் பகுதியில் தொழில் புரியும் மீனவர்களின் வள்ளங்களை ஒரே இடத்தில் கட்டுமாறும், வள்ளங்களுக்கு இலக்கங்கள் இடுமாறும் கடற்படையினர் மீனவர்களை வற்புறுத்தி வருகின்றனர். இதனால் மீனவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கின்றனர். அத்துடன் காரைநகர் பகுதியில் 'பாஸ்' நடைமுறை தொடர்ந்து கொண்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (52)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு
29 - 08 - 1929



உதிர்வு
25 - 09 - 2002

### அமரர் வேலன் சிவகுரு

25.09.2002இல் அமரத்துவம் அடைந்த அமரர் வேலன் சிவகுரு அவர்களின் 31ஆம் நாள் நினைவு நிகழ்வு இன்று (25.10.2002) வெள்ளிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கலந்து அன்னாரது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

*கந்தரோடை வீதி,*
*மாகியம்பதி,*
*சண்டிலிப்பாய்.*
(021)

சிவகுரு இராசம்மா (மனைவி),
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்,
மைத்துனர்கள்
மற்றும் உறவினர்கள்.

## கேள்வி அறிவித்தல்

### அரசாங்க அதிபர் அலுவலகம், கச்சேரி, யாழ்ப்பாணம்

1. அச்சுவேலி சுற்றயல்கூறு வைத்தியசாலையில் வெளிநோயாளருக்கான (கீழ்தளம்) கட்டடம் நிர்மாணிப்பதற்கான வேலைக்கான கேள்விகள் என்னால் நியமிக்கப்பட்ட மாவட்ட கேள்விச் சபைத் தலைவரினால் 2002ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 14ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிவரை யாழ். செயலக மேலதிக அரசாங்க அதிபரின் அலுவலகத்தில் இதற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடப்படவேண்டும். பெறப்பட்ட கேள்விகள் எமது செயலகத்தில் உடனடியாக திறக்கப்படும்.

2. நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் (ICTAD) கட்டடம் நிர்மாணிப்பதற்கு தரம் எம்-7 அல்லது அதற்குமேல் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் மட்டும் கேள்விப் பத்திரம் கோருவதற்குத் தகுதியுடையோராவார்.

3. ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தினரால் வழங்கப்பட்டதும் இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விபரங்க்ள் அடங்கியதுமான பதிவுப் புத்தகத்தினை நிறைவேற்று எந்திரியிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

4. தகுதியுடையோர் மட்டும் உரிய கேள்வி வைப்புப் பணத்தைச் செலுத்த அனுமதிக்கப்படுவர். பிரதம எந்திரி அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம், கடற்கரை வீதி, யாழ்ப்பாணத்தில் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக ரூபா 750/= ஐ செலுத்திப் பெற்றுக் கொள்ளப்பட்ட பொது 172 பற்றுச்சீட்டை யாழ்ப்பாணம் மாகாணக் கட்டடங்கள் திணைக்கள நிறைவேற்று எந்திரி அலுவலகத்தில் சமர்ப்பித்து 2002ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 8ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிவரை அலுவலக நேரங்களில் கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும்.

5. கேள்வி கோருபவர் ஒருவருக்கு ஒரு தொகுதி ஆவணங்கள் மட்டும் விநியோகிக்கப்படும்.

6. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம். அத்துடன் ஏதும் மேலதிக விவரங்களை யாழ்ப்பாணம் மாகாண கட்டடங்கள் திணைக்கள நிறைவேற்று எந்திரியிடமிருந்து வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

*கச்சேரி,*
*யாழ்ப்பாணம்.*
(சி-081)
செ.பத்மநாதன்,
அரசாங்க அதிபர்,
யாழ்ப்பாணம்.

# ஒழுக்கமான வாழ்க்கையும் எச்சரிக்கையும் சமூகத்தில் 'எயிட்ஸ்' பரவுவதைத் தடுக்கும்!

**மகப்பேறு மருத்துவ நிபுணரும், பெண்ணோயியல் மருத்துவ நிபுணருமான வைத்திய கலாநிதி ஜி. பவானி மருத்துவ உலகில் தனக்கெனத் தனியிடம் ஒன்றினை பெற்றுக் கொண்டவர். கடந்த கால அசாதாரண சூழ்நிலையிலும் இன்று நிலவும் சுமுக சூழ்நிலையிலும் அவர் நோயாளர்க்கு ஆற்றிவரும் அப்பழுக்கற்ற பணிகள் சமூகத்தின் பல்வேறு தரப்பினராலும் ஆத்மார்த்த ரீதியாகப் பாராட்டப்படுகின்றன. என்ஞான்றும் அவை பாராட்டப்படும். தனது வேலைப்பளு மத்தியிலும் தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் ஒன்றுவிட்ட ஒரு ஞாயிற்றுக்கிழமைகளில் அவர் நோயாளருக்கு இலவச மருத்துவ சிகிச்சை அளித்து வருவதுடன், தூய சேவை மனப்பான்மையுடன் மனித நேயமிக்க ஆன்மீகப் பற்றுமிக்க முன்மாதிரிப் பெண்மணியாகவும் திகழ்ந்து வருகிறார். அவருடனான நேர்காணல் இது.**

● ***கேள்வி:-* AIDS என்றால் என்ன?**

● *பதில் :-* **Aquired Immune Deficiency Syndrome** என்பதே சுருக்கமாக **AIDS** என்று கூறப்படுகிறது. உடலில், நோய் எதிர்ப்புச் சக்திக் குறைபாடு ஏற்படுவதால் பலவிதமான தொற்று நோய்களும் இலகுவில் ஏற்பட்டு பாதிப்பை ஏற்படுத்தும். இந்தக் குறைபாடு HIV என்ற வைரஸ் கிருமியினால் ஏற்படுகிறது.

● ***கேள்வி:-* AIDS நோய்க்கான அறிகுறிகள் என்ன?**

● *பதில்:-* HIV வைரஸ் தொற்று ஏற்பட்டு கிட்டத்தட்ட 10 வருடங்களின் பின்னரே நோய்க்கான அறிகுறிகள் ஏற்படும். அதுவரை, தொற்று ஏற்பட்டவர் சாதாரணமாகவே இருப்பார். பின்னர் உடம்பு மெலிதல், அடிக்கடி காய்ச்சல் ஏற்படல், வாயிலும் தொண்டையிலும் புண்கள், தீராத இருமல் போன்றவை ஏற்படும். நோய் முற்றிய காலத்தில் தோலில் புற்றுநோய் வளர்ச்சிகளும் ஏற்படலாம்.

● ***கேள்வி:-*HIV கிருமித் தொற்று எவ்வாறு ஏற்படுகிறது?**

● *பதில்:-*HIV தொற்று ஏற்பட்டுள்ள ஒருவருடன் பாலியல் சேர்க்கையில் ஈடுபடுவதாலும், நோய் உள்ளவரின் இரத்தத்தை ஒருவரின் உடலில் பாய்ச்சுவதாலும், நோயாளிக்குப் பாவித்த ஊசிகளை மற்றையோருக்குப் பாவிப்பதாலும் ஏற்படலாம். இதைவிட கர்ப்பமான பெண்ணிற்கு நோய் இருந்தால் அவரின் சிசுவுக்கும் பரவலாம்.

● ***கேள்வி:-* HIV கிருமித் தொற்று எவ்வாறு பரவமாட்டாது?**

● பதில்:-சாதாரணத் தொடுகை, கட்டியணைத்தல், நோயாளியைப் பராமரித்தல், பக்கத்தில் வசித்தல், ஒரே பாத்திரங்களைப் பாவித்தல் என்பவற்றால் பரவமாட்டாது.

● ***கேள்வி:-* நோய்த்தொற்று பரவும் முறைகளை அறிந்திருப்பதன் அவசியம் என்ன?**

● *பதில் :-*ஒருவர் தன்னை நோய்த் தொற்றில் இருந்து பாதுகாக்கவும், அதேவேளை - தொற்று ஏற்பட்டவருடன் பழகும் போது அனாவசியமாகப் பயந்து அவரைச் சமுதாயத்தில் இருந்து ஒதுக்கி வைக்காமல் இருப்பதற்கும் இந்த அறிவு உதவும்.

● ***கேள்வி:-*தொற்று ஏற்பட்டதை எவ்வாறு உறுதி செய்யலாம்?**

*பதில்:-* இரத்தப் பரிசோதனை செய்து உறுதி செய்யலாம். இவ்வாறு உறுதிசெய்யப்பட்டால் நோயாளிக்கு முதலில் இதைத் தெரி




விக்க வேண்டும். அதன்பின் நோய் மற்றவர்களிற்குப் பரவுதலைத் தடுக்கும் வகைகள் பற்றி நோயாளிக்குத் தெரிவித்தல் வேண்டும். ஒருவருக்கு நோய்த் தொற்று ஏற்பட்டிருப்பதை நோயாளி தவிர்ந்த மற்றையோருக்கு வைத்தியர் தெரியப்படுத்த முடியாது. இதனால் நோயாளி விரும்பினால் ஒழிய மற்றையோருக்கு தெரியவராது. இதனால் நோய்பரவுவதற்கான சந்தர்ப்பங்களை மற்றையோர் தவிர்த்துக் கொள்ளவும் முடியாது போகலாம்.

● ***கேள்வி:-*தனக்கு நோய்த் தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்று சந்தேகிப்பவர் என்ன செய்யலாம்?**

● *பதில்:-* வைத்தியரிடம் சென்று இதைத் தெரிவித்து இரத்தப் பரிசோதனையை மேற்கொள்ளலாம். அதன் பின்னர் மற்றவர்களிற்கு நோய் பரவாமல் தடுக்கும் முறைகளைக் கையாள வேண்டும்.

● ***கேள்வி:-*நோய்த் தொற்று பரவாமல் என்ன செய்யலாம்?**

● *பதில்:-* ஒன்று - பாலியல் சேர்க்கையின்போது ஆணுறை பாவிப்பதால் தொற்று ஏற்படும் சந்தர்ப்பத்தைக் குறைக்கலாம். யாருக்கு நோய் இருக்கும் என்று சொல்ல முடியாது என்பதால் (கணவனுக்கோ, மனைவிக்கோ கூட) கணவன்-மனைவி உறவில் கூட ஆணுறை பாவிப்பதுதான் நல்லது. கணவனோ, மனைவியோ தவிர்ந்த மற்றையோருடன் உடலுறவு கொள்ளும்போது இது மிகவும் முக்கியம்.

ஆண் பெண் உறவைவிட, ஆணுக்கும் ஆணுக்கும் இடையில் ஏற்படும் குதவழியான பாலியல் உறவின் போது (**Homo sexuals**) **HIV** பரவுவதற்கான சந்தர்ப்பம் அதிகம். எனவே அவர்கள் ஆணுறை பாவிப்பது அவசியம்.

இரண்டு - இரத்த வங்கிகளில் இரத்ததானம் செய்வோரின் இரத்தம் **HIV** இற்குச் சோதிக்கப்பட்ட பின்னரே தேவையானோருக்கு பாவிப்பதற்கு விடப்பட வேண்டும்.

மூன்று - ஊசி மருந்துகளை ஏற்றுவதற்கும் இரத்த சோதனை செய்வதற்கும் பாவிக்கும் ஊசிகளை ஒரு முறை பாவித்தபின் வீசிவிடுதல் (**Disposable needles**) நல்லது.

● ***கேள்வி:-*AIDS நோய்க்கு மருந்து உண்டா?**

● *பதில்:-* இந்நோயை முற்றாக சுகப்படுத்தும் மருந்துகள் ஏதும் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனால் நோயின் தாக்கத்தை குறைக்கக்கூடிய மருந்துகள் இருக்கின்றன. அந்த மருந்துகள் மிகமிக விலைகூடியவை. எனவே நோய் ஏற்பட்ட எல்லோரினாலும் அவற்றை வாங்கிப் பாவிக்க முடியாது.

● ***கேள்வி:-*இன்றைய கால கட்டத்தில் நோய் அதிகம் பரவுவதற்குரிய ஏதுவாக சினிமா குற்றம் சாட்டப்படுகிறது. இது எவ்வளவு தூரம் உண்மை?**

● *பதில்:-*எந்த ஒரு துறையிலும் நன்மை தீமை இரண்டும் கலந்தே இருக்கும். சினிமாவில் வரும் கவர்ச்சிக் காட்சிகள், காதல் காட்சிகள் போன்றவை பாலியல் உணர்ச்சிகளைத் தூண்டுவதாக அமைகின்றன. ஆனால், சினிமாவில் தேவையற்ற உறவுகளால் வரும் பாதகமான விளைவுகள் கூட காட்டப்படுகின்றன. பண்படுத்தப்பட்ட மனம் இரண்டையும் சீர்தூக்கிப் பார்த்துத்தான் செயற்படும். ஆனால் மனத்தைப் பண்படுத்தாமல் விடுவதுதான் சினிமாவின் தீய பகுதிகளை ஏற்றுக் கொள்வதற்குக் காரணம்.

● ***கேள்வி:-*பெற்றோரின் சொற் கேளாமல் நடப்பதும் தற்போது உள்ள சமூகத்தில் AIDS பரவுவதற்கு**



Dr. ஜி.பவானி

**ஏதுவாக இருப்பதாகக் கூறப்படுகிறதே?**

● *பதில்:-*முந்திய காலங்களில் பெற்றோர் சொல்வதைப் பிள்ளைகள் அப்படியே ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கு இருந்தது. ஆனால், இப்போது ஏன், எதற்கு என்று கேள்வி கேட்டே பிள்ளைகள் செயற்படுகின்றனர். இது தவறு என்று கூறமுடியாது. உண்மையில் மூடத்தனமாக எதையும் பின்பற்றாது காரண காரியங்களை அறிந்து செயற்படுவது முன்னேற்றத்தின் அறிகுறி. அதனால் பெற்றோர் எதையும் சொல்லும் போது சொல்லுவதற்கான காரணங்களையும் தெளிவாகக் கூறினால் பிள்ளைகள் ஏற்றுக்கொண்டு பயனடைவர். உதாரணமாக, பெண் பிள்ளைகளை ஆண்களுடன் கதைக்க வேண்டாம் என்று சட்டம் போடுவது பலன் அளிக்காது. இதற்குப் பதிலாக, ஆண்களுடன் பழகும்போது பாலியல் கவர்ச்சியினால் உந்தப்பட்டுத் தகாத உறவு ஏற்படச் சந்தர்ப்பம் உண்டு என்பதையும் அவ்வாறு ஏற்படுமிடத்து வேண்டாத கர்ப்பமும், **AIDS** போன்ற நோய்களும் ஏற்படும் என்பதையும் விளக்கிக் கூறினால் பிள்ளைகள் விளங்கிக் கொள்வர். ஆனால், அவ்வாறு கூற பெற்றோரும் ஆசிரியர்களும் தயக்கம் காட்டுகின்றனர்.

● ***கேள்வி:-* AIDS நோய் பரவாமல் தடுக்க சமூகத்தின் பங்கு என்ன?**

● *பதில்:-*AIDS நோய் பரவும் முறை பற்றிய பூரண அறிவின்மையால் சமூகம் நோயாளியை வன்மையாக ஒதுக்கி வைக்கிறது. அவ்வாறு செய்வதால், நோயாளி கள் தங் களின் நோய் பற்றிய உண்மையை மூடிமறைக்கின்றனர். இதனால் நோய் பரவும் சந்தர்ப்பம் கூடுகின்றது.

இதற்குப் பதிலாக, நோய் பரவும் முறை பற்றிய பூரண அறிவைக் கொண்ட சமூகம் நோயாளியை அனுதாபத்தோடு நடத்துமானால், நோயாளியும் உண்மையை மறைக்காது, மற்றவர்களிற்கு நோய் பரப்பாது இருப்பதில் ஒத்துழைப்புத் தருவார்.

● ***கேள்வி:-*AIDS பரவாமல் தடுக்க சமூகப் பெரியோர்கள், சுகாதார சேவையாளர்களின் பங்கு என்ன?**

● *பதில்:-*AIDS விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை ஒழுங்கு செய்து சமூகத்தின் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். இத்தகைய கருத்தரங்குகளை இளம் சமுதாயத்திடையே மட்டுமன்றி சமூகத்திடம் உள்ள மூத்தோர் மத்தியிலும் நடத்த வேண்டும். ஏனெனில், இத்தகைய கருத்தரங்குகளை இளையோருக்கு நடத்துவதில் குற்றம் கண்டு அவற்றிற்கு முட்டுக்கட்டையாக இருப்பது சில மூத்தோரே. ஆகவே, முதலில் அவர்களுக்கு உண்மையைத் தெரியப்படுத்த அவர்கள் மத்தியில் கருத்தரங்குகளை முதலில் நடத்துதல் முக்கியம்.

● ***கேள்வி:-*AIDS பற்றிய கருத்தரங்குகளும், அறிவுப் பெருக்கமும் மட்டும் நோய் பரவாமல் தடுத்துவிடுமா?**

● *பதில்:-*இல்லை. ஒவ்வொருவரினதும் மனப்பாங்கு மற்றையோரின் நலனையும் கருத்தில் கொள்வதாக அமையவேண்டும். சுயநல மனப்பாங்கு அதிகமாக உள்ள சமுதாயத்தில் இருக்கும் நோயாளியும், எவ்வளவு தான் அறிவு இருந்தாலும் சுயநலம் காரணமாக மற்றையோருக்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய நடவடிக்கைகளில் ஈடுபடுவார். அதே போல் சமூகமும் நோயாளியினதும் அவரின் உறவினதும் மனத்தைப் புண்படுத்தும் வகையில் நடப்பர். இது மேலும் நோயாளியின் ஒத்துழையாமையை அதிகரிக்கும்.

● ***கேள்வி:-*தன்னைப்போல் மற்றவனையும் நேசிக்கும் மனப்பான்மையை எவ்வாறு வளர்ப்பது?**

● *பதில்:-* சகல சமயங்களும் இதைத்தான் போதிக்கின்றன. ஆனால் எல்லாரும் போதிப்பதில் தான் அக்கறை செலுதுதுகிறார்களே ஒழிய நடைமுறையில் நடந்து காட்டுவதில்லை. சிறுபிராயத்தில் இருந்தே இத்தகைய மனப்பாங்கை வளர்க்கும் விதத்தில் பெற் றோரும், ஆசிரியரும் மற்றும் பெரியோர்களும் நடந்து காட்டினால், இளஞ்சமுதாயத்தின் மனப்பாங்கும் அவ்வாறே அமையும்.

**நேர்காணல்:- ஸ்ரீநடா**

# சிவனை வழிபட்டு சிறப்புக்கள் சேர்ப்போம்



**சிவனே முழுமுதற் கடவுள்**

அகரத்தை முதலாக உடையன எழுத்துக்கள். அனைத்துயிர்களும், உலகங்களும் இறைவனை முதலாக உடையன. காரணம் இல்லையேல் காரியம் நிகழ்வதில்லை. அகிலம் அனைத்தும் உண்டாவதற்கு காரணமாகிய படைப்பாற்றல் ஒன்று இருப்பது உறுதிப்படுகின்றது. அத்தகு ஆற்றல் குறைவிலா நிறைவாக விளங்குதல் வேண்டும். அல்லது முதன்மையாக, முழுமையாக, செம்மையாக இருத்தல் வேண்டும். செம்மையுடையவன் சிவன். செம்மை என்னும் பெயர் வண்ணம், வடிவு, செயல் ஆகிய மூன்றை யும் ஒருங்கே உணர்த்தும் பொதுப்பொருளாகும் எனவே சிவனை முழுமுதற்கடவுள் ஏன நம் முன்னோர் அழைத்தனர்.

**இருவினையகலச் சிவனை வணங்குவோம்.**

எல்லாம் வல்லவன், எங்கும் நிறைந்தவன், என்றும் உள்ளவனாகிய இறைவனுக்கு சிற்றறிவுடைய நாம் செய்யும் வழிபாடும் வேண்டுமோ? அவன்தான் "வேண்டுதல் வேண்டாமையிலாதவனாயிற்றே!" "எல்லாமாய், இல்லதுமாய் இருந்ததனை இருந்தபடி இருந்து காட்டிச் சொல்லாமல் சொன்னவரை நினையாமல் நினைந்துபவத் தொடக்கை வெல்வாம்" என்பார் பரஞ்சோதியார். "அவனடி சேர்ந்தார்க்கு யாண்டும் இடும்பை இல" என்பார் வள்ளுவர். சிவனை வழிபட்டால் இரு வினைகளும் மாய்கின்றன."இருள் சேர் இருவினையும் சேரா இறைவன் பொருள் சேர் புகழ் புரிந்தார் மாட்டு" என்பது தமிழ்மறை. பொருள் சேர் புகழ் புரிதலே வழிபாடாகும்.

வெண்ணிற ஆடையில் தன்னியல்பாகவே அழுக்குப் படிகின்றது. ஆடை தூய்மை பெற அதனை உவர் மண்ணீரில் நனைக்கின்றோம். அப்பொழுது முன்னிருந்த அழுக்குடன் மண்ணின் அழுக்கும் சேர்கின்றது. இருவகை அழுக்கையும் போக்க நீராவியில் வேகவைக்கின்றோம்.பின்னர், தண்ணீரில் நனைத்து கல்லில் தோய்க்கின்றோம். இப்பொழுது ஆடை தன்னியல்பாய் தூய்மை பெறுகிறது. இவ்வண்ணம் உயிர்களை ஆணவமலம், மாயாமலம் ஆகிய இருவகை மாசுகள் பிணிக்கின்றன. பிணிப்புற்ற உயிர்கள் விடுபட வழிபாடொன்றே சிறந்த மருந்தாகும். யாவருக்கும் வழிபாடு வேண்டப்படுவது.

சிவ வழிபாடு மன்னுயிர்களுக்கு மட்டும் உரியதன்று. மண்ணவரும் விண்ணவரும் சிவ வழிபாட்டால் கடைத்தேறியுள்ளனர். முழுமுதற் கடவுளாம் சிவபெருமானை அம்பிகை வழிபட்ட இடம் திருவானைக்கா, பிள்ளையார் வழிபட்ட இடம் திருச்செங்காட்டங்குடி, முருகவேல் வழிபட்டது திருச்செய்ஞலூர், பிரமன் வழிபட்ட தலம் சீகாழி, திருமால் வழிபட்ட இடம் இராமேச்சரம்.

வழிபாடு இயற்றுவோர் யாவராயினும் யாதாயினுமொரு பொருளால் இறைவனை வழிபடுதல் மரபாகும். சாக்கியர் கல்லாலும், நாவரசர் சொல்லாலும், சம்பந்தர் தமிழாலும், சுந்தரர் பாட்டாலும், பாணபத்திரர் இசையாலும், மணிவாசகர் வாசகத்தாலும், குசேலர் அவலாலும், குகன் மீனாலும், கண்ணப்பர் ஊனாலும், வந்தி பிட்டாலும், சபரி கனியாலும், கசேந்திரன் மலராலும் வழி பட்டு உய்யப்பெற்ற காட்சியை சைவசமய உலகம் நன்கறியும்.

உலகில் உயிர்கள் உடம்போடு பொருந்துகின்றபொழுது படைப்பாற்றல் முகிழ்க்கின்றது. வாழ்வுக்குத் தேவையான உடம்பையும், உடம்பை வளர்த்தற்கு துணையாக உலகையும், உலகத்துக்கு தேவையான பொருட்களையும், பொருட்களை உணர்வு வழித்துய்ப்பதற்கான இன்பங்களையும் (தனு , கரண, புவன போகம்) இறைவன் படைத்துள்ளான்.

இவ்வாறு படைக்கப்பெற்ற உயிர்கள், துய்ப்பதற்குரிய உலகினையும், உலகியற் பொருட்களையும் நிலைநிறுத்தல் காத்தல் எனப்படும். உயிர்கள் தமக்கென வரையறுக்கப்பெற்ற காலவெல்லை கடந்தவுடன், விசை முடுக்கப்பெற்ற கடிகாரம் காலஎல்லை முடிந்த பின்னர் அடங்கி விடுவதுபோல, அவைகளையும், அவை துய்க்கும் போகப் பொருட்களையும் தமக்குள் ஒடுக்குதல் அழித்தலாகும்.

ஆன்மாக்களை இருவினைப் பயனாகிய மாயையில் ஆழ்த்துதல் மறைத்தல் எனப்படும். அவ்வினைப் பயன்களாகிய பாசங்களினின்றும் பசுக்களாகிய உயிர்களை விடுவித்தல் அருளுதல் எனப்படும். இதனை "ஆக்குவாய், காப்பாய், அழிப்பாய், அருள்தருவாய், போக்கு வாய்" என்று சிவபுராணம் பேசுகின்றது.

இவ்வாறாக இறை பெருமை பேசப்படுகின்ற அத்தகு இறைவனை அவன் முன் அமர்ந்து திருவிளக்கேற்றி பூமாலை சூட்டி யாதாயினும், பழமோ இனிய பண்டமோ படைத்து, நறும் புகையும், கற்பூர ஒளியும் காட்டித் துதித்து வணங்குதல் முறையாகும்.

நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே!நீவா
நித்தமும் எம்பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன் முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேற்றிப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்தும் ஆடிச்
சங்கரா!சய போற்றி! போற்றி! யென்றும்
அலைபுனல் சேர் செஞ்சடையெம் ஆதியென்றும் ஆரூரா என்றென்று அரற்றா நில்லே!

ஆன்மீக அரங்கம்

எனும் அப்பர் பெருமான் அருள் வாக்கு நமக்கு வழி காட்டுகின்றது. ஆகவே வையத்துள் வாழ்வாங்கு வாழ சைவசமயி என்ற நெறிமுறை பிறழாமல் என்றும் இன்பமுடன் வாழ சிவன் தாள் பற்றித் தொழுவோம் அவனருளால் வாழ்வோம்.

**கவிமாமணி காரை. எம்.பி.அருளானந்தன்**

# ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழக குழந்தைகளுக்கு பிரபாகரன் எனப் பெயர்சூட்டிப் பெருமைப்பட்டேன்!

**விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் தலைவரும், தமிழக சட்டமன்ற உறுப்பினருமான இரா.திருமாவளவன் 'நமது ஈழநாட்டுக்கு' அளித்த விசேட பேட்டி இது.**

*கேள்வி:-* நீங்கள் இந்தியாவில் இருந்து யாழ்ப்பாணத்தைப் பார்ப்பதற்கும் தற்போது நேரடியாகப் பார்ப்பதற்கும் இடையிலான உங்கள் உணர்வுகள் எப்படி இருக்கிறது.?

*பதில்:-* 83 ஆம் ஆண்டிலிருந்து ஈழத்துப் பிரச்சினையை நாம் அவதானித்து இருக்கிறோம். இங்கே நடந்த சம்பவங்களை, அங்கே அகதிகளாக வருபவர்களிடம் கேட்டிருக்கின்றோம். மற்றபடி பத்திரிகையில் பார்த்திருக்கிறோம். ஆனால், நேரில் வந்து பார்க்கின்றபோது இனம்புரியாத பீதி மனதிற்குள் ஏற்பட்டிருக்கின்றது. மனதுக்குள் புதிய பாதிப்பு உருவாகியிருக்கு.

அதேநேரத்தில் இவ்வளவு மோசமான, கொடூரமான இராணுவ அடக்குமுறையைக்கூட நமது சகோதரர்கள், இராணுவ ரீதியாக எதிர்கொண்டிருக்கிறார்கள்; மக்களுக்குப் பாதுகாப்பைக் கொடுத்திருக்கிறார்கள். மக்களுக்கு நம்பிக்கையைக் கொடுத்திருக்கிறார்கள் என்று நினைக்கும்போது மிகவும் பிரமிப்பாகவும், பெருமையாகவும் இருக்கிறது.

இது வெற்றிகரமாக அமைந்து தனி ஈழம் கிடைக்கவேண்டும். தமிழீழம் என்பது இதுவரைகாலமும் இழந்த இழப்புக்களுக்கும், தியாகங்களுக்கும் கிடைக்கும் வெகுமதியாக இருக்கும். இல்லையென்றால் அது ஏமாற்றமாக அமையும் என்ற மனநெருடல் எம் மனதுக்குள் இருக்கும்.

இந்த மண்ணைத் தொடவேண்டும் என எமக்கு நீண்டகால ஏக்கம் இருந்தது. இப்போது நாம் வந்தது எமக்கு மனதுக்கு ஒரு ஆறுதல். வந்தோம், பார்த்தோம், புலிகளோடு நாம் கொஞ்ச நாள் வந்திருக்கிறோம் என்ற மனநிறைவு இருக்கிறது.

*கேள்வி:-* ஈழப்போராட்டத்தின் தாக்கம் உங்களுக்கு ஒரு உத்வேகமாக இருக்கிறதா?

*பதில்:-* ஆமாம், விடுதலைப் புலிகளின் தாக்கம் எமை ஆட்கொண்டதால்தான் நாம் அங்கும் விடுதலைச் சிறுத்தைகள் என்ற பெயரில் இயங்கத் தொடங்கியிருக்கின்றோம். தமிழ்த் தேசியத்தையும் இணைத்து, சாதி ஒழிப்பையும் மேற்கொள்வதுதான் எமது அமைப்பின் அடிப்படைக் கொள்கையாக இருக்கிறது. அந்தவகையில் இன்று ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்களைத் திரட்டி, கூட்டங்களில் பங்குபற்றி ஈழப்பிரச்சினை பற்றிப் பேசுகின்ற ஒருபெரும் மக்கள் அமைப்பாக விடுதலைச் சிறுத்தைகள் செயற்பட்டுவருகின்றது.

ஈழத்தமிழர் பிரச்சினை பற்றி ஆராய்ந்துவரும், பேசிவரும் அமைப்பென்று நாம் நோக்கும்போது, விடுதலைச் சிறுத்தைகள் அணி அதில் பிரதான பங்கு வகிக்கின்றது என நான் நம்புகின்றேன். இது விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் அடிப்படைக் கொள்கையில் இருந்து வருகின்றது. விடுதலைப் புலிகளை ஆதரிப்பதால், நமக்கு ஏதும் சிறப்பு மரியாதை கிடைக்கும் என்று நாம் இதைப் பேசிவரவில்லை. நாம் எதை எதிர்நோக்கியிருக்கிறோமோ, அந்த எண்ணம் ஈடேறக்கூடிய வகையில் விடுதலைப் புலிகள் - படையமைத்துள்ளனர். உலகில் நான்காவது வல்லரசு என்று சொல்லக்கூடிய இந்திய இராணுவத்துடனேயே போர் செய்த ஆற்றல் அவர்களுக்கு இருக்கிறது.

தமிழனுக்கு வலிமை இருக்கிறது. படை நடத்தக்கூடிய ஆற்றல் இருக்கிறது. ஒரு அரசுக்கு இணையாக இன்னொரு அரசை அமைக்கக்கூடிய வல்லமை இருக்கிறது என நிறுவும் வகையில் - விடுதலைப்புலிகள் சாதனை படைத்திருக்கிறார்கள். இது ஒரு வகையில் பெருமையைத் தருகிறது.

ஈழத்தில் இருந்து பிரபாகரன் தலைமையில் தமிழ் இன விடுதலைக்கான போர் நடந்துகொண்டு இருக்கிறது. அது ஒரு பொதுமக்கள் யுத்தமாகவே நடந்துகொண்டு இருக்கிறது. இங்கு எப்படி தமிழ்த்தேசியத்தை முன் வைக்கிறோமோ அதுபோல அங்கும் தமிழ்த்தேசியத்தை முன்வைக்க முனைகி



றோம். நான் இந்த ஆறு ஆண்டுகாலங்களில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட குழந்தைகளுக்குப் "பிரபாகரன்" என்ற பெயரை வைத்திருக்கிறேன். இதை எல்லாம் எதனுடைய அடையாளம் என்று பார்க்கிறேன் என்றால் - அங்கு ஒரு தமிழ்த்தேசிய எழுச்சியை உருவாக்க அது கருவியாக அமையும் என்று நம்புகிறேன்.

*கேள்வி:* தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் - சில கட்சிகள் ஈழத்தமிழர்களைப் பிரச்சினையில் ஒன்றுபட்டு ஒரு குரலில் நிற்கின்ற ஒரு நிலைமையை காண்கிறோம். இப்படியான இந்த ஒன்றுபட்ட நிலைமை தமிழர்களிடையே ஒரு ஒற்றுமைக்கு இட்டுச்செல்ல முடியுமா?


*பதில்:* தமிழகத்துக்கு அரசியற் கட்சிகளில் ஒரு கட்சிகூட மிச்சமில்லாமல் தேர்தல் அரசியலிலே ஆதாயம் தேடுவது எப்படி என்கின்ற அடிப்படையில் தான் தமிழ் உணர்வையும் பார்க்கிறார்கள். தமிழ்த் தேசிய உணர்வை ஏற்படுத்த வேண்டுமென்கின்ற தொலைநோக்குப் பார்வையோடு தமிழக அரசியற் கட்சிகள், தேர்தலில் பங்கேற்கின்ற அரசியற் கட்சிகள் சிந்திக்கவும் இல்லை. செயற்படவும் இல்லை. பழ.நெடுமாறனின் தலைமையில் உள்ள தமிழர் தேசிய இயக்கம் போன்ற தமிழ்த் தேசியத்திற்கான அமைப்புக்கள், அத்தகைய உணர்வுகளில் துடிப்பாகவும், வீரியமாகவும் இருந்தாலும் கூட - அவர்கள் தேர்தல் அரசியலில் ஈடுபடாத காரணத்தால் அதையொரு பொதுமக்கள் இயக்கமாக அல்லது பரந்துபட்ட தமிழக மக்களின் கருத்தியலாக மாற்றி அமைத்துச் செல்ல முடியவில்லை என்பதை நடைமுறையில் காண்கிறோம்.

10 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த மக்களின் பார்வை வேறு. இப்போது மக்களிடையே இருக்கின்ற அரசியல் பார்வை வேறு. ஒரு தலைவன் அது சாதாரணமானவனாக இருந்தாலும் சரி. மிகப்பெரிய தலைவனாக இருந்தாலும் சரி - அவன் எந்த நோக்கத்திற்காகப் பேசுகிறான் என்று ஊகிக்க முடிகிறது. புலிகள் எதிர்ப்புத் தீர்மானத்தைச் சட்டசபையில் கொண்டுவந்த போது பா.ம.கவினர் வெளிநடப்புச் செய்தார்கள். நானும் வெளிநடப்புச் செய்தேன்.

ஆனால், ம.தி.மு.க., பாட்டாளி மக்கள் கட்சி போன்ற பல கட்சிகளில் விடுதலைப்புலிகளை ஆதரிக்கக்கூடிய மன நிலையில் உள்ளவர்கள் இருக்கின்றார்கள். ஆனால் - இந்திய அரசியல் சூழலில் அதனை வெளிப்படையாகவோ, பகிரங்கமாகவோ முன்னெடுத்துச் செல்லக்கூடிய வகையிலே அத்தகைய கட்சிகளால் செயற்பட முடிவதில்லை. இதுதான் உண்மையான நிலைமை. அரசியல் ரீதியாக ஈழத்தமிழருக்கு ஆதரவாக வெளிப்படையாக பேசமுடியாத சூழல் தமிழகத்தில் நிலவுவது ஒரு வேதனையான நிலைதான்.

*கேள்வி:-* ஈழப்பிரச்சனை தொடர்பான பங்களிப்பு எதிர்வரும் காலங்களில் தமிழக தமிழ் மக்களிடம் எப்படி அமையும் என நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்?

*பதில்:-* ஈழப்பிரச்சினையில் தமிழக அரசியல் கட்சிகளை நம்பி இருப்பது என்பது அவ்வளவு அறிவுபூர்வமான அணுகுமுறையாக எனக்குப்படவில்லை. அதற்காக - தமிழக மக்களை நாம் எதிர்த்துக்கொள்ளவும் முடியாது. அரசியற்கட்சிகளை பகைத்துக் கொள்ளவும் முடியாது. விடுதலைப்புலிகளுக்கும் இந்திய அரசிற்கும் நல்ல உறவு மலர்ந்து இருக்கிறது என்




பதைக் காட்டவேண்டிய சூழல் - ஒரு நெருக்கடி உருவாகி இருக்கிறது. அந்த நிலை உருவாகும்போது தமிழக மக்கள் எந்த அச்சமும் இல்லாமல் தமிழீழப் பிரச்சினையில் ஆர்வம் காட்டுவார்கள். இப்போது அவர்களுக்கு அச்சமிருக்கிறது. இந்திய அரசை எதிர்த்துக்கொண்டு விடுதலைப்புலிகளை ஆதரிப்பதா? என்ற அச்சம் இருக்கிறது. எனவே இந்திய அரசுடன் ஒரு நல்லிணக்கத்தை உருவாக்க வேண்டிய ஒரு பெரிய பொறுப்பு விடுதலைப் புலிகளுக்கு இருக்கிறது.

*கேள்வி:-* இங்கு அவதானித்த விடயங்களை தமிழகத்தில் எவ்வாறு எடுத்துக் கூறுவீர்கள் எனக் கூறமுடியுமா?

*பதில்:-* கலையிலக்கிய விழாக்களில் கலந்து கொண்டதைப் பற்றித்தான் சொல்ல முடியும். இங்கு வந்ததே சட்டவிரோதமானதாகத்தான் தமிழக அரசு பார்க்கும். இந்த நிலையில் ஈழப்பிரச்சினையை ஊடகங்களுக்கு எடுத்துச்சொல்வதனை நாம் வெகு அவதானமாகத்தான் செய்ய வேண்டும். ஆனால் மக்களிடத்தே, பொதுக்கூட்டங்களிலே, இயக்கத்தின் செயற்குழுக்களிலே நிச்சயமாக வெளிப்படையாகப் பேசுவேன். அவற்றில் எந்தக் கருத்துக்களை வலியுறுத்துவதிலும் எனக்கு உடன்பாடே. ஊடகங்களிலே பெரும்பாலானவை ஈழவிடுதலைப் போருக்கு எதிரானதாக, விடுதலைச் சிறுத்தை இயக்கத்தையே வளரவிடக்கூடாது என்ற கருத்து உள்ளவையாக தமிழகத்தில் இயங்கி வருகின்றன. ஆக இந்த நிலையில் ஊடகங்களுக்கு முன்னால் இந்தக் கருத்துக்களைச் சொல்லவேண்டிய அவசியமில்லை என்று நான் நினைக்கின்றேன். நாங்கள் நடத்தும் தாய் மண் என்ற மாத இதழிலே இந்தச் செய்திகள் எல்லாவற்றையும் விளக்கமாக எழுதவுள்ளேன்.

இன்றைக்கு விடுதலைப்புலிகள் - சிங்கள் இராணுவத்தையும் இந்திய இராணுவத்தையும் எதிர்கொண்டு முறியடித்திருக்கும் சாதனைகளைத் தமிகத்திலுள்ளோர் அறிவார்கள். ஆனால்- இவர்கள் வன்முறையாளர்கள் அல்லர்; தீவிரவாதிகள் அல்லர்; மக்களோடு இணைந்து களப்பணியாற்றிக் கொண்டிருப்பவர்கள்; மக்களுக்கான ஆட்சி நிர்வாகத்தை நடத்துகின்றார்கள்; தொலைநோக்குப் பார்வையுடன் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்; அநாதைக் குழந்தைகளை எடுத்து பராமரிக்கின்றார்கள்; கல்வி கற்பிக்கின்றார்கள்; மருத்துவமனை நிர்வாகத்தைச் சிறப்பாக நடத்துகின்றார்கள்; கல்வித் திட்டத்தையும், தமிழீழக் கல்விக்கான ஒரு செயல் திட்டத்தையும் உருவாக்கி என்னவற்றையெல்லாம் செய்ய வேண்டுமோ, அதற்கான பாடத்திட்டத்தையெல்லாம் உருவாக்கி அதற்கேற்ப கல்வி நிர்வாகத்தைச் சிறப்பாக இயக்கி வருகின்றார்கள்; ஆட்சி நிர்வாகத்தை சிறப்பாக இயக்கிக்கொண்டு இருக்கிறார்கள் என்பதனை எல்லாம் நாம் அங்கு எடுத்துச்சொல்ல வேண்டிய தேவை இருக்கிறது. அதன் மூலம்தான் விடுதலைப் புலிகள் மக்களுக்கான போராளிகள்; விடுதலைக்கான போராளிகள் என்று நாம் நிறுவ வேண்டும். ஏனெனில் - வெறுமனே இவர்கள் இராணுவவெறி பிடித்த கும்பல்; ஒரு ஆதிக்கத்தை எதிர்க்கின்ற ஆதிக்கவெறி உடைய கும்பல் என்ற வகையான பார்வைதான் தமிழக மக்களிடம் திணிக்கப்பட்டிருக்கிறது. அதனை முறியடிக்கும் செயலில் விடுதலைச் சிறுத்தைகள்



அணி செயற்படும்.

*கேள்வி:* தமிழர் பிரச்சினை சம்பந்தமாக ஜெயலலிதாவின் மனம் மாறக்கூடிய வாய்ப்புண்டா?

*பதில்:* நான் அப்படி நினைக்கவில்லை. ஏனென்றால் அவசியமில்லாத நேரத்தில் விடுதலைப் புலிகள் மீதான தடையை அவர் கொண்டு வந்துள்ளார் என்பதைப் பார்க்கும் போது அவரின் மனநிலை நன்றாகப் புரிகிறது. 1991ஆம் ஆண்டு ராஜீவ்காந்தி கொல்லப்பட்டபோது அப்போது இவ்வாறு அவர் செயற்பட்டிருந்தால் ஆதங்கத்தில் அவ்வாறு செய்தார் என்று நாம் எடுத்துக் கொள்ளலாம். ஆனால், இன்றைக்கு காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்கள் அதனை மறந்து விட்டார்கள். ராஜீவ்காந்தியின் துணைவியார் - கொலை வழக்கில் சம்பந்தப்பட்டதாக கருதப்படும் நளினியை விடுதலை செய்யச் சொல்லி இருக்கிறார். இந்த மாதிரியான மாற்றம் நிகழ்ந்து கொண்டிருக்கும்போது, அதாவது பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்திலேயே மாற்றம் ஏற்பட்டிருக்கும்போது, இந்த நிலையில் தமிழக முதலமைச்சர் மட்டும் விடுதலைப் புலிகளை மிகவும் எதிர்த்து, விடுதலைப் புலிகள் தமிழக எல்லைக்குள் கால் வைக்கக்கூடாது என்ற வகையில் இன்றைக்கு "பொடா" சட்டத்தை நடைமுறைப்படுத்தி இருக்கிறார். ஆகவே - இந்த நிலையில் அவரிடம் ஈழத் தமிழர் பிரச்சினை பற்றிய சாதகமான எண்ணம் அவரிடம் இருக்கும் என்று நாம் எண்ணுவதில் பொருத்தமில்லை என்றுதான் நான் நினைக்கின்றேன்.

*கேள்வி:-* சர்வதேசரீதியில் விடுதலைப்புலிகளே ஈழத்தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்று ஏற்றுக்கொள்ளும் நிலை வந்துள்ளது. அப்படியிருக்க தமிழகம் ஏன் இந்த நிலையிலுள்ளது?

*பதில்:-* தமிழ்நாடு அரசு எதற்காக இந்தப் பிரச்சனையை பெரிதுபடுத்துகின்றார்கள் என்று நம்மால் ஊகம் செய்யமுடியவில்லை. முதலில் நாம் எப்படி நினைத்தோம் என்றால் - விடுதலைப் புலிகளை எதிர்ப்பதன் மூலம் காங்கிரஸோடு தேசிய அளவிலான நெருக்கத்தைப் பெற்றுக்கொள்ள அ.தி.மு. கழகம் முயற்சிக்கிறதோ என எண்ணத் தோன்றியது. ஆனால் திடீரென்று - சோனியாகாந்தி ஒரு வெள்ளைக்காரி, எப்படி இந்தியாவை ஆள்வது?, அதை அனுமதிக்கமாட்டோம் என்றெல்லாம் அவர்கள் விமர்சிப்பதனைப் பார்த்தால் காங்கிரஸுடன் ஜெயலலிதாவால் சேர முடியாது. மாறாக - பாரதீய ஜனதா கட்சியுடன் தமது உறவை ஏற்படுத்திக்கொள்ள முயற்சிக்கிறாரோ என்று கருதவேண்டியிருக்கிறது. அத்தகைய உறவு அவர்களிடையே உருவாகியும் இருக்கிறது. பா.ஜ.கட்சியைச் சார்ந்த முன்னணித் தலைவர்களுக்கும் முதல்வருக்கும் இடையே அத்தகைய ஒரு நல்லிணக்கமான உறவு வளர்ந்து வந்திருக்கின்றது என்பதை அவர்கள் கொடுக்கும் பேட்டிகள் மூலம் தெரிந்துகொள்ள முடிகின்றது. எனவே இந்த மாதிரியான சூழலில் முதல்வர் "பொடா" சட்டத்தைப் பயன்படுத்தி விடுதலைப் புலிகளை ஆதரிப்பவர்களைக்கூடச் சிறையில் தள்ளும் அளவுக்கு அவர் தீவிரமாக இருக்கின்றார். ஆனால் அவர் எந்த நோக்கத்தில் அப்படிச் செய்கின்றார் என்று எம்மால் ஊகிக்க முடியவில்லை.

*கேள்வி:-* ஈழத்தமிழ் மக்களுக்கு நீங்கள் சொல்லும் செய்தி என்ன?

*பதில்:-* ஈழத் தமிழர்களுக்கு, இங்கே களத்தில் நின்று போராடுபவர்களுக்கென எதுவும் சொல்வதற்கு இல்லை. சொல்ல முனைந்தால் அது அதிகபிரசங்கித்தனம். புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள் நம்பிக்கையோடு காத்திருக்கின்றார்கள். அவர்களுடைய நம்பிக்கை வீண் போகாது. அந்த நம்பிக்கை நிறைவேற வேண்டும் என்றால் அவர்கள் களத்தில் நின்று போராடும் புலிகளுக்கு எந்தவகையில் எல்லாம் உதவி செய்ய முடியுமோ அந்த வகையில் எல்லாம் உதவி செய்ய வேண்டும். இங்கு நிகழ்வது ஈழத்தில் வாழும் தமிழர்களின் விடுதலைக்கான போராட்டம் என்று பார்க்காமல், ஒட்டுமொத்தமாக உலகெங்கும் வாழும் தமிழர்களுக்கான ஒரு அரசு அமையப்போகின்றது என்கின்ற பார்வையைப் பெற்று ஈழ விடுதலையை தார்மீகமாக ஆதரிக்க வேண்டும் என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

உலகத்தில் சில லட்சம் மக்கள் இருக்கின்ற இனத்தைச் சார்ந்தவர்களுக்குக்கூட பல நாடுகள் இருக்கின்றன. ஆனால் எட்டுக்கோடி மக்கள் கொண்ட தமிழினத்துக்கு தனியாக அரசு அமையவில்லை. ஆறு கோடி தமிழர்கள் இந்திய பேரரசின் சிறைக்குள் சிக்கியிருக்கிறார்கள். இந்தியத் தேசிய ஒருமைப்பாடு என்கின்ற ஒரு போலித்தனமான நாட்டுப்பற்றுக்குள்ளே சிக்கியிருக்கிறார்கள். ஆதலால் அவர்களால் தமிழ்த்தேசிய எழுச்சியை உருவாக்க முடியாது. தமிழனுக்கென்று ஒரு அரசை உருவாக்க முடியாது. தமிழர்களுக்கென்று ஒரு தனி அரசு உருவாகுமென்றால் அது தனித் தமிழீழமாகத்தான் இருக்க முடியும். விடுதலைப் புலிகளால்தான் அதனைச் செய்ய முடியும். இதனை உலகின் இதர பிரதேசங்களில் வாழும் தமிழர்கள் உணர்ந்து ஒரு தமிழ்த் தேசியப் போராட்டமாக இதனை ஆதரிக்க வேண்டும். வெளிப்படையாகத் துணிந்து ஆதரிக்க வேண்டும். அதுதான் இன்றைய காலகட்டத்தின் தேவையும் கூட. இதுதான் நான் 'நமது ஈழநாடு' மூலம் மக்களுக்குச் சொல்லவரும் செய்தியும்.

❖

# நான் வாழ்ந்த கிராமியச் சூழலே என்னை எழுதத் தூண்டியது!

**வாழ்வில் ஏற்படும் சிக்கல்களை தத்ரூபமாகப் படம் பிடித்துக் காட்டுவதில், தாமரைச் செல்வியின் படைப்புகள் வாசகர்களைக் கவரும் தன்மை கொண்டவை. அவரது கருத்துக் களங்கள்- கிராமிய வாழ்க்கையையும், வன்னி மக்கள்பட்ட கஷ்டங்கள், சிரமங்கள், ஈழப்போராட்டம் பற்றியதுமாக, வெற்றிகரமாகத் தனது படைப்புத்திறனை வெளிக்கொணர்ந்துள்ளார்.**

**கேள்வி:- நீங்கள் சிறுகதை எழுத்துலகில் பிரவேசிப்பதற்குரிய பின்புலம் பற்றிக் கூறுவீர்களா?**

பதில்:- சாதாரண கிராமச் சூழலில் நான் வளர்ந்துள்ளேன். அந்தக் கிராமத்தின் சமூகத் தாக்கங்கள், சமூக உறவுகள் போன்றவற்றால் உந்தப்பட்ட நான் சிறுகதைகளை எழுதுவதற்கு முனைந்தேன். சமூகத் தாக்கங்களை அடிப்படையாக வைத்தே எனது கதைகள் உருவாகின. அத்தோடு- எனக்கு சிறுவயது முதல் இருந்த வாசிப்புப் பழக்கம் இதற்கு பெரும் தூண்டுதலையும், துணிவையும் ஏற்படுத்தியது என்று கூறலாம்.



**கேள்வி:- வாசிப்பில் உங்களிற்கு ஆர்வம் இருந்தது என்று கூறுகிறீர்கள். அந்தவகையில் உங்களைக் கவர்ந்த எழுத்தாளர் களைக் குறிப்பிடுவீர்களா?**

பதில்:- கல்கி, "ஆனந்த விகடன்" ஆசிரியர்கள், "தீபம்" ஆசிரியர் பார்த்தசாரதி, "மணிக்கொடி" எழுத்தாளர்களான கு.ப. ராஜகோபால், பிச்சமூர்த்தி, ஜெயகாந்தன் போன்றவர்களின் கதை களை அதிகம் வாசித்தேன்.

**கேள்வி:- இளமைக் காலத்திலேயே நீங்கள் எழுத்துக்துறையில் பிரவேசித்து விட்டீர்களா?**

பதில்:- ஆம். இளமைக் காலத்திலேயே எழுத ஆரம்பித்தும் எனது 21ஆவது வயதில் தான் முதலாவது வெளியீடாக "ஒரு கோபுரம் சரிகிறது" என்ற சிறுகதை 1974 ஆம் ஆண்டு வீரகேசரி பத்திரிகையில் பிரசுரமானது. இது எனக்கு மிகுந்த உற்சாகத்தைத் தந் தது.

**கேள்வி:- உங்களுடைய சிறு கதைகளின் பின்புலம் எதைப்பற்றிக் கூடுதலாகக் கருக்கொண்டது?**

பதில்:- சமூகத்தில் புரையோடி யிருந்த பழக்க வழக்கங்களை மாற்றியமைக்க வேண்டுமென்ற கருத்தோட்டத்தில் ஆர்வமாக இருந்தமையால் எழுபதுகளில் சமூகப்பார்வை சார்ந்த சிறுகதை களையும் எண்பத்திமூன்றுகளின் பின்னர் போராட்டச் சூழலை பிரதி பலிக்கும் சிறுகதைகளையும் எழுத ஆரம்பித்தேன்.

## சிறுகதை எழுத்தாளர் தாமரைச்செல்வியுடனான நேர்காணல் - கலாநந்தி, உஷா

**கேள்வி:- சமூகம் சார்ந்த சிறுகதை என்ற வகையில் பெண்ணியம் சார்ந்த சிறுகதைகளை எழுதியுள்ளீர்களா? அதில் குறிப்பிடக்கூடியது?**

பதில்:- ஆம் நிறையவே எழுதியுள்ளேன். அதில் குறிப்பிடக் கூடியது என்ற வகையில், ஒரு பெண்ணை சமூகம் பார்த்த பார்வை; அதனால் அவளின் வாழ்க்கைப் பாதையில் ஏற்பட்ட மாற்றம் தொடர்பாக "பாதை" எனும் சிறுகதை குறிப்பிடக்கூடியது.

**தாய், தகப்பன், மகள் எனும் மூன்று அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பம். அக்குடும்பத்தின் சுமைகளை மகளே ஏற்று நடத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டாள. இந்நிலையில் குடும்பத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான சகல வேலைகளையும் அவளே செய்து வரும்போது, அவளிற்கு திருமண ஏற்பாடொன்று நடைபெற்றது. திருமண நாளும் வைக்கப்பட்டது. நிறைந்த சந்தோசத்துடனும், இனிய கனவுகளுடனும் உலாவி வந்த அவளின் திருமணத்திற்கு நாட்கள் நெருங்கும்போது திடீரென திருமணம் நிறுத்தப்பட்டது. வெளியே சென்று வீட்டுக் காரியங்களைச் செய்து வந்த பெண் என்ற வகையில் அதற்கு காரணம் காட்டப்பட்டது. இப்படியும் மனிதர்கள் இருக்கிறார்களா? என்று சிலீர்த்துக் கொண்ட அவள் புயலெனவே புறப்படுகின்றாள் மணமகன் வீடு நோக்கி... கொடுத்த சீதனப் பணத்தை மீளப் பெறுவதற்காக.**

- "பாதை" சிறுகதையின் கரு

**கேள்வி:- நீங்கள் எழுதிய சிறுகதைகளுள் சிலவற்றையும், குறுநாவல்களையும் குறிப் பிடுவீர்களா?**

பதில்:- "ஒரு மழைக்கால இரவு", "இங்கேயும் சில இழப்புக்கள்", "சுமைகள்", "தாகம்", "விண்ணில் அல்ல விடிவெள்ளி", "பாதை", "உயிர் இருக்கும் வரை". என்பவை குறிப்பிடக்கூடிய சிறுகதைகள். குறுநாவல்கள் மூன்று எழுதினேன். "அவர்கள் தேவர்களின் வாரிசுகள்", "வீதியெல்லாம் தோரணங்கள்", "வேள்வித்தீ" என்பவையே அவை.

**கேள்வி:- இதுவரை எத்தனை சிறுகதைகளை எழுதியுள்ளீர்கள்?**

பதில்:- சுமார் 150 சிறுகதைகள் எழுதியுள்ளேன்.

**கேள்வி:- இவற்றுள் பரிசுகளை வென்றுள்ள சிறுகதைகளில் குறிப்பிடக் கூடியவை?**

பதில்:- இதுவரை 18 பரிசுகள் கிடைத்துள்ளன.

"விண்ணில் அல்ல விடிவெள்ளி" என்ற சிறுகதைக்கு யாழ்.இலக்கியப் பேரவையின் பாராட்டுப்பரிசு 1992லும், "தாகம்" சிறுகதைக்கு சுதந்திர இலக்கிய அமைப்பின் முதற்பரிசு 1993லும், இவற்றோடு விருதுகள் என்ற வகையில் "ஒரு மழைக்கால இரவு" சிறுகதைத் தொகுப்பிற்கு வடக்கு-கிழக்கு மாகாண அமைச்சின் சிறந்த சிறுகதைத் தொகுப்புக்கான விருது 1998லும், வடக்கு- கிழக்கு மாகாண அமைச்சின் ஆளுநர் விருதும் கிடைத்தது. 2002இல் கிளிநொச்சி தமிழ்ச் சங்கத்தினால் "இலக்கிய மணி" பட்டத்துடன் விருதும் கிடைத்துள்ளது. குறுநாவல்கள் மூன்றிற்கும் பரிசுகள் கிடைத்துள்ளன.

**கேள்வி:- சிறுகதை உலகில் சஞ்சரித்துள்ளீர்கள் என்ற வகையில் படைப்புகளாக பதிவு செய்யப்பட்ட மறக்க முடியாத நிகழ்வுகள் பற்றி?**

பதில்:- படைப்புகளாக பதிவு செய்யப்பட்டது எதுவுமில்லை. நிகழ்வுகள் என்ற வகையில் ஆனையிறவு படைத்தளத்தை அண்டிய பிரதேசத்தில் நான் வாழ்ந்துள்ளமையால் 100 வீதமான போராட்டச் சூழலைச் சந்தித்துள்ளேன். அந்த வகையில் பரந்தனில் 6 பேர் சுடப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவம் - இராணுவ ஆக்கிரமிப்பு, சுற்றிவளைப்பு போன்றவற்றுக்குள் அகப்பட்டமை ஆகியன மறக்கமுடியாத நிகழ்வுகள்.

**கேள்வி:- சிறுகதை எழுத்துத்துறையைப் பொறுத்தவரையில் திருமணத்திற்குப் பின்னர் உங்கள் கணவரின் ஒத்துழைப்புப் பற்றி?**


பதில்:- நிறையவே கிடைத்தது. திருமணத்திற்கு முன்னர் எனக்கு இருந்த சிறுகதை ஆற்றலை விட திருமணத்திற்குப் பின்னரே நிறைய ஆக்கங்களை வெளிக்கொணரக் கூடியதாக இருந்தது. எதுவித கட்டுப்பாடுமின்றி கிடைத்த எனது கணவனின் பூரண ஒத்துழைப்பு என்னை மிகவும் இத்துறையில் வளர்க்க உறுதுணையாக இருந்தது.

**கேள்வி:- உங்களின் அடுத்த வெளியீடு பற்றி?**

பதில்:- எனது அடுத்த வெளியீடு "அழுவதற்கு நேரமில்லை" எனும் சிறுகதைத் தொகுதியாக வெகு விரைவில் வெளிவர இருக்கின்றது.




## அன்பின் சிந்திக்கு! ஓர் மனந் திறக்கும் மடல்






*சிந்தி,*

*உனது கடிதம் பொறிக்கும் புயலாக வந்து கிடைத்தது. உன் உணர்ச்சிகள் எனக்குப் புரிந்தாலும் உன் கருத்துக் களுடன் என்னால் ஒத்துப் போக முடியவில்லையென்பதை எழுதித்தானாக வேண்டும்.*

*எம்மை ஒரு வீட்டினுள் சிறை வைத்து, கதவுகள் ஜன்னல்கள் எல்லாவற்றையுமே பூட்டி விட்டார்கள் என்று வைத்துக் கொள்வோம். அதிலிருந்து நாம் வெளியேற முயல வேண்டும்.சிறை வாழ்க்கை நாம் வாழக்கூடாது. அதற்காக வீட்டிலேயே வாழக்கூடாது என்று தீர்மானித்து விடக்கூடாது. வீட்டில் சுதந்திரமாக, காற்றோட்டமாக ஜன்னல்களைத் திறந்து வைத்து, வேண்டியபோது வெளியே போய் வந்து வாழ வேண்டும்.*

*வீடே வேண்டாமென்று ஹிப்பிகள் போல வீதிகளிலும், வெளிகளிலும் வாழப்புறப்பட்டவர்கள் நிம்மதி இழந்து, நாகரிகம் பிறழ்ந்து அலைகின்றார்கள். எனவே அவர்களின் பாதையை நாம் பின்பற்றுவது பைத்தியக்காரத்தனம்.*

*தாய்,தந்தை, பிள்ளைகள், சகோதரர்கள், கணவன், மனைவி என்ற உறவுப் பந்தங்களையும் அவை குடியிருக்கும் இல்லத்தையும் இல்லாமலாக்குவது நம் நோக்கமல்ல. இந்த அன்பும் பாசமும் அற்றுப் போனால் மனிதன் மனிதத்தன் மையை இழந்து விடுவான்.*

*இந்தப் பாச பந்தங்களை நாம் எம்மைப் பிணைத்திருக்கும் கட்டுக்கள் என்று கருதவில்லை, கருதக்கூடாது.*

*நாம் கூறமுனைவது என்னவென்றால் விட்டுக்கொடுப் பவள் எப்போதும் பெண்ணாகத்தான் இருக்க வேண்டுமென் றில்லை.*

*உதாரணமாக ஒரு பெண்ணின் விருப்பமின்றியே வல்லுறவுக்கு உட்படுத்தப்படும்போதும் பேசப்படும் கற்புநெறி மிகவும் அபத்தமானது என்பதுதான். கொடூரமான பாலியல் வல்லுறுவுக்கு ஒரு பெண் ஆளாக்கப்பட்டால் அதை வைத்தே அப் பெண்ணின் எதிர்கால வாழ்வை சிதைத்து விட ஏன் எத்தனிக்கப்படுகின்றது?*

*இவ்வாறெல்லாம் நாம் சற்றே தெளிவுறச் சொன்னால் குடும்பம் என்ற அமைப்பையே தேவையற்றதாகக் கருதுகி றோமென்று சொல்பவர்கள் வேண்டு மென்றே குற்றங் கூற முனைபவர்கள்.*

*குடும்பத்தில் பிரச்சினை வந்தால் அதைச் சமாளித்துப் பொறுத்துப் போகும் தன்மை ஆணுக்கும் வேண்டும். பெண் ணுக்கும் வேண்டும்.*

*பொறுத்துப் போகக்கூடிய விடயங்களிலெல்லாம் தூக்கியெறிந்து விட்டு, போர்க்கொடி தூக்குவதை ஆணும் செய்யக்கூடாது. பெண்ணும் செய்யக்கூடாது.*

*அதேவேளை எல்லை மீறிய துன்பங்களையும் வேதனைகளையும் தாங்கிக் கொண்டு பொறுமையின் இலக்கணமாக வாழவேண்டுமென்று பெண்ணுக்கு மட்டும் போதித்து, அவளை வேதனைச் சுமைதாங்கியாக்கக்கூடாது. அந்த நிலையில் அவள் நிமிர்ந்து நின்று நியாயங் கேட்டால் மாபெருந் தவறென்று ஏன் கருதுகிறார்கள்? அத்தகைய வேளைகளில் நாம் பொங்கியெழத்தான் வேண்டும்.*

*அன்பு நிறைந்த மனத்தோடும் புரிந்துணர்வோடும் இருப் பவர்களுக்கு இவையெல்லாம் இயல்பாக செயற்ப டுத்தக்கூடியவையே. அதை விட்டு பொறாமையோ, எதிர்ப்பு மனப்பான்மையோ, பெண்கள் இப்படித்தான் இருக்க வேண்டு மென்ற மரபுவழிக்குப் பழக்கப்பட்ட மனோபாவமோ உள்ள வர்கள்தான் நாம் கூறுவதைப் புரிந்து கொள்ள மறுப்பார்கள்.*

*பாசபந்தங்கள் நிறைந்த அன்புமயமான குடும்ப வாழ்க்கை வாழும் எமது மரபை நாம் பேணவேண்டுமென்பதில் யாருக்கும் எந்த முரண்பாடுமிருக்கக்கூடாது. மீண்டும் சந்திப்போம்.*

*அன்புடன்*
*யோசி*

## கேக் தயாரிக்கும் போது கவனிக்க வேண்டிய சில வழிமுறைகள்

- அப்பச்சோடா, பேக்கிங் பவுடர், மா ஆகியவற்றை நன்றாகக் கையால் கலந்து பின்னர் மூன்று முறை அரித்தல் வேண்டும்.
- 4 தேனீர் கரண்டியளவு பால்மாவை 1/2 டம்ளர் தண்ணீரில் கரைத்து வடித்துக் கேக் கலவையுடன் சேர்த்தால் கேக் மென்மையாக வரும்.
- கஜு ,பிளம்ஸ் ஆகியவற்றை மாவில் பிரட்டிய பின் கேக் கலவையுடன் சேர்த்தல்வேண்டும்.
- கேக் தட்டைத் தயார் செய்யும் போது பேப்பர் விரித்து மேலே ஓயில் பேப்பர் விரித்தல் வேண்டும்.
- ஐசிங் செய்வதாயின் முந்திரியம் வற்றல், முந்திரியம் பருப்பு கேக்கின் கலவைக்குள் போடுதல் ஆகாது.



-க.திரு

# துணியில் பூச் செய்வது எப்படி?

## செவ்வரத்தம் பூ

(CHINEES ROSE)

### தேவையான பொருட்கள்

பப்பிளின் துணி 1/2M (சிவப்பு)
பப்பிளின் துணி- 1/4M (பச்சை)
பட்டர்சில்க் துணி- (சிவப்பு)
மகரந்தம்
கட்டுக்கம்பி
ரவை
கேசரிப்பவுடர்
பைண்டர் கம்
**Flower tape**
ரிசு

### செய்முறை:

செவ்வரத்தம் பூச்செய்வதற்கு கஞ்சியிடப்பட்ட சிவப்புநிறப் பப்பிளின் துணியில் இதழ் வடிவிலான மாதிரியுரு (**Cutting**) வை வைத்து 5 இதழ்கள் வெட்டி எடுக்கவும். அவற்றை சமச்சீராக மேலிருந்து கீழ் ரிசு சுற்றப்பட்ட கட்டுக்கம்பியுடன் பைண்டர் கம்மால் ஒட்டவும். பின்னர் அதனைக் கம்பியுடன் சேர்த்து லேஞ்சியில் வைத்து றூள் பண்ணவும். பின்னர் தனியொரு கம்பியில் சிவப்புநிற ரிசு ஒட்டியபின், அதன் நுனியில் 5 மகரந்தம் வைத்து கட்டியபின், பட்டர்சில்க் துணியில் அளவான துண்டு ஒன்றை வெட்டி எடுத்து, அதன் இரு கரைகளையும் நூல் இழுத்து மகரந்தத்தின் கீழ் அக்கம்பியை சுற்றி ஒட்டவும். ஒட்டிய பின் றூள் செய்த 5 இதழ்களையும் அக்கம்பியுடன் ஒவ்வொன்றாக வைத்து இறுக்கக்கட்டவும். பின் **Cutting** ஐ வைத்து பச்சை நிறத்துணியில் புல்லி வெட்டி பூவின் அடியில் சுற்றி ஒட்டவும். பின் துணியில் வெட்டிய மகரந்தத்திற்கு ரவையும் கேசரிப்பவுடரும் கலந்து (பைண்டர் கம்) பூசித் தூவி விடவும். இறுதியாக கட்டுக்கம்பிக்கு **Flower tape** சுற்றவும். மேற்கூறியவாறு வெட்டிய பூ இதழ் ஒன்றை ரிசு சுற்றிய கம்பியுடன் ஒட்டி சுற்றி மொட்டினை உருவாக்கலாம். இதற்கும் அடியில் புல்லி ஒட்டவும். பச்சை நிறத்துணியில் இலை **Cutting** ஐ வைத்து வெட்டி **Flower tape** சுற்றிய ஒட்டி றூள் செய்யவும். இறுதியாக எல்லாவற்றையும் சேர்த்து ஓர் ஒழுங்கில் ஒழுங்கு படுத்தி அழகான ஓர் செண்டாகப் பெறமுடியும்.



# பெண்சிசுவின் விண்ணப்பம்



இருண்ட உன் கருவறைக்குள்
தொடர்ந்தென்னை
இருக்க விடு தாயே.......!
வரண்ட கொள்கைகளால்
பெண்களைச்
சுரண்டும் சமூகத்தை
நான் தரிசிக்காமல்
நீ உண்ட மிச்சங்கள்
சுவைத்தபடி
கருப்பை இருட்டில் - என்
காலங்களை கழித்துச் சுகம்
காண்கின்றேன்.

சின்ன வயசுக் குறும்புகள்
பருவம் அடைய
விடுபட்டு
அருவியாய்ப் பாய்ந்த என்
வாழ்வு
பனிக்கட்டியாய் இறுக்கப்பட
கட்டிய தாலியோடு
எங்கோ ஒரு மூலையில் முடங்கி
முகவரியற்று நான் தொலைவதைவிட
இருண்ட உன் கருவறைக்குள்
தொடர்ந்தென்னை
இருக்க விடு தாயே...

**- நர்மதா நாகேந்திரம்**
**கொழும்புத்துறை**


# உடல் நலத்துடன் மகிழ்ச்சியாய் வாழப் பத்து வழிகள்



**உடல் நலமாக இருந்தால் தான் மகிழ்ச்சி உண்டாகும். வாழ்வில் துயரம் ஏற்படாது. எனவே சில வழிமுறைகளை பின்பற்றுவோமேயானால் உடல் நலம் எப்போதும் உங்களுடன்தான். அதற்கான 10 வழிகளைக் கடைப்பிடித்தாலே போதும்.**

❒ கோடைகாலமோ, மழைக்காலமோ உடலை வறட்சியாக இருக்கவிடாதீர்கள். தண்ணீர் தினசரி அதிகமாக அருந்துவது சிறுநீரகத்தை பாதிக்காமல் வைத்திருக்கச் செய்யும், எனவே அவ்வவ்போது நீர் அருந்துங்கள்.

❒ உடலில் நோய்கள் இருக்கிறதா என்ற சந்தேகமே எழக்கூடாது. இதற்காக இரத்த அழுத்தம், சிறுநீர் என்பவற்றின் அளவு எப்படி இருக்கிறது என்பதைப் பரிசோதித்துக் கொள்ளுங்கள். இதில் வரும் முடிவுகளுக்கு ஏற்றவாறு உடலைச் சீராக வைத்திருங்கள்.



❒ உணவில் கட்டுப்பாடு கட்டாயம் வேண்டும். சரியான நேரத்துக்கு தேவையான அளவு சாப்பிடுங்கள். அப்பிள், முட்டை, உலர்ந்த திராட்சை, தேன், பால் அன்றாட உணவில் வருமாறு பார்த்துக் கொள்ளுங்கள்.

❒ தோல் பாதுகாப்பு மிக அவசியம். சுத்தமாக வைத்துக்கொண்டால் நோய்கள் எட்டிப்பார்க்காது. வாரம் ஒரு முறை முகத்தை பேஷியல் செய்யலாம். கடலை மாவு, பால் கலந்து மிருதுவாக முகத்தில் தடவி வையுங்கள். பின்னர் வெதுவெதுப்பான நீரில் கழுவுங்கள். முகத்தில் ஆவி பிடித்தால் அழுக்குகள் அகலும்.

❒ மனதை மகிழ்ச்சியாக வைத்திருப்பதும் ஒரு நல்ல வழி. நல்லதையே நினையுங்கள்.

❒ கவலையை அகற்றப் பழகிக் கொள்ளுங்கள். நேரத்துக்குச சாப்பிடுங்கள் . தேவையற்ற விடயங்களைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். உங்கள் உணவுப் பழக்கத்தை - கவலையால் பாதிக்க விடாதீர்கள்.

❒ காலையில் இருபது நிமிடங்கள் நடை பயிலுவது நல்லது. இது உடலைப் புத்துணர்ச்சியுடன் வைத்திருக்க உதவும். வாரத்தில் 5 நாட்கள் இதைத் தவறாது கடைப்பிடியுங்கள். ஒரு மாற்றத்தை உணர்வீர்கள். அதிக எடை போடாது இரத்தவோட்டம் சீராகும். தசைகளில் வலு உண்டாகும்.

❒ இரவில் நேரத்துடன் நித்திரைக்குச் செல்லுங்கள். அதிகாலையிலேயே எழுந்து கொள்ளப் பழகுங்கள்.

❒ தியானம் செய்வது மன நிம்மதி தரும். இரத்தவோட்டத்தைச் சீராக்கும். உடலைப் புத்துணர்ச்சியோடு வைத்துக் கொள்ள உதவும்.

❒ மாதத்திற்கு ஒரு முறையாவது சந்தோஷமாக குடும்பத்துடன் சுற்றுலா சென்றுவாருங்கள். **மனம் மகிழ்ச்சியாகும்.**

# நீங்களும் செய்து பாருங்கள்...

## Full French Plate



முடியை மேல் நோக்கி வாரி எடுத்து, அதில் சிறிதளவு முடியை எடுத்து மூன்றாகப் பிரித்து, சாதாரண பின்னல் பின்னுவது போல் இரண்டு முறை பின்னிவிட்டு பின் மேல் நோக்கி வைக்கும் முடியுடன் இரண்டு பக்கத்திலும் சிறிது சிறிதாக முடியை எடுத்து மேல் நோக்கி வைக்கவும். பின் சாதாரண பின்னல் போல் பின்னுதல் வேண்டும். நீளமாக பின்னிய பின் அடியில் முடியை விட்டு **Wool band** போடலாம். இல்லாவிடின் மடித்து பின்னலின் அடியினுள் செலுத்தி **Knot** போடலாம்.




# பருப்புக் கேசரி

சுவைத்துச் சாப்பிட சுவையோ சுவை!

### தேவையான பொருட்கள்

| | | |
|---|---|---|
| பயறு | - | 1/4 கிலோ |
| சர்க்கரை | - | 1/4 கிலோ |
| தேங்காய் | - | 1/2 பாதி |
| நெய் | - | 150 கிராம் |
| கஜு | - | 50 கிராம் |

### செய்முறை:

உடைத்த பயற்றை பொன்னிறமாக வறுத்து ஊறவைக்கவும். பின் தண்ணீர் ஊற்றாமல் அதனை அரைத்து எடுக்கவும். பின் அடுப்பில் தாச்சியை வைத்து, காய்ந்ததும் நெய்யை ஊற்றி கஜுவைப் போட்டு வறுத்த பின் , துருவிய தேங்காய்ப்பூ, சர்க்கரை, அரைத்த பயற்றை- இவை மூன்றையும் சேர்த்துக் கிளறி வேக வைக்கவும். கையில் ஒட்டாமல் இருக்கும் போது இறக்கி வைக்கவும். இது மிகவும் சுவையாக இருக்கும். இதன்பின் வெட்டிப் பரிமாறலாம்.



நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225108 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*மேல் இருந்தும் மேல் அல்லார் மேல் அல்லர் கீழ் இருந்தும் கீழ்அல்லார் கீழ்அல் லவர்.*

-திருக்குறள்.

# நமது நோக்கு

## அரசியல் நாகரீகமற்ற செயல்

இலங்கைத் தீவில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான தீவிர முயற்சிகளில் இறங்கியிருக்கும் நோர்வே நாட்டை-ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மீண்டும் ஒருமுறை உதாசீனம் செய்யுமுகமாக நடந்திருக்கிறார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடனும், தொடர்ந்து -விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுடனும் முக்கிய பேச்சுக்களை நடாத்தி விட்டு, சமாதானத்திற்கான அடுத்த நகர்வுக்கு செல்லும்முகமானதும், மக்களது இயல்பு வாழ்க்கையை உறுதிப்படுத்துவதுமான சமாதான முயற்சிகளுக்குப் பின்னர்-தன்னைச் சந்திக்க வந்த நோர்வேக் குழுவினரை, 'வேலைப்பளு'வைக் காரணம் காட்டி ஜனாதிபதி சந்திரிகா சந்திக்க மறுத்ததானது-தற்போது மேற்கொள்ளப்படும் அமைதி முயற்சிகளில் அவருக்குள்ள பொறுப்பற்ற தன்மையையும், அலட்சியப் போக்கையும் வெளிப்படுத்தி நிற்கின்றது.

மாநாடுகளிலும், ஊடகங்களிலும் - சமாதான முயற்சிகளுக்கு தனது ஆதரவு இருப்பதாகப் பேசி விட்டு, யதார்த்தத்தில் அமைதிக்கான நகர்வுகளை உதாசீனப்படுத்துவதென்பது, ஜனாதிபதி சந்திரிகாவின் முரண்பட்ட தோற்றங்களையும், அவற்றின் பின்னால் உள்ள அவரது உண்மையான நிலைப்பாட்டையும் வெளியுலகுக்கு எடுத்துக் காட்டுகின்றது.

இதேவேளை-இலங்கைத் தீவில் அமைதியை ஏற்படுத்தக் கிடைத்துள்ள அரியதொரு வாய்ப்பினைப் பயன்படுத்தாமல்-குறுகிய அரசியல் நோக்கம் கொண்டு அவர் செயற்படுகின்றாரோ என்ற சந்தேகத்தையும் ஜனாதிபதி சந்திரிகாவின் செயற்பாடுகள் வலிதாக்குகின்றன.

கடந்த சில நாட்களாக - தென்னிலங்கையில், ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக்கெதிராக மிகத் தந்திரமான காய் நகர்த்தல்களில் தனது முழுக்கவனத்தைச் செலுத்தியும், அதனூடாக மீண்டும் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கான ஆட்சியதிகாரத்தைப் பெற்றுக்கொள்வதில் ஆர்வமும் கொள்ளும் ஜனாதிபதி சந்திரிகாவிடம்,

அரசியல் ஆதாயங்களைக் கடந்த அமைதிக்கான ஆதரவையும், அதன் வழியே இலங்கைத் தீவில் நிரந்தர சமாதானத்துக்குமான வாய்ப்புக்களை உருவாக்க வேண்டிய தேவைக்கான உந்துதலையும் எதிர்பார்ப்பது ஒருவகையில் வீணான எதிர்பார்ப்போ என்று எண்ணத் தோன்றுகின்றது.

ஏற்கனவே - சமாதானத் தூதுவர்களாகச் செயற்படும் நோர்வே நாட்டவர்கள் மீது - கடுமையான, தேவையற்ற, காழ்ப்புணர்வு கொண்ட விமர்சனங்களை முன்வைத்தவரிடம் - இதுபோன்ற அலட்சியப்போக்குத் தென்படுவது, சாதாரண விடயம் என்றும் சிந்திக்கத் தோன்றுகின்றது.

ஆனால்- ஒரு தனிப்பட்ட நபராக சந்திரிகா குமாரதுங்கவிடம் எத்தகைய போக்குகளை எதிர்பார்த்தாலும் ஒரு ஜனாதிபதிக்குரிய பொறுப்புணர்விலும், சமாதானம் நோக்கிய இன்றைய காலகட்டத்தின் அவசியம் கருதியும் - அவரிடமிருந்து இவ்வாறான நடவடிக்கைகள் தென்படுவது - ஒரு ஆரோக்கியமான அரசியல்வாதிக்குரிய குணாம்சமாகத் தென்படவில்லை என்பது சுட்டிக்காட்ட வேண்டியதாகும்.

தனது தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களுக்கப்பால், அரசியல் ஆதாயங்களுக்கப்பால் செயற்பட வேண்டிய ஜனாதிபதி சந்திரிகா - இதுபோன்று நடந்துகொள்வது, அவரது பதவிக்கு அழகானதல்ல என்பது புரிந்துகொள்ளப்பட வேண்டும்.

சர்வதேசமும் உன்னிப்பாக அவதானித்துவரும்-இலங்கையின் அரசியற் களத்தில், மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு நடவடிக்கையும் - பல்வித பரிமாணங்களையும் கொண்டு நோக்கப்படுகையில் - சமாதான முயற்சிகளுக்கு இவ்வாறான ஒத்துழையாமையைத் தொடர்ந்தும் ஜனாதிபதி சந்திரிகா கடைப்பிடிப்பாரானால் அது அவரது அரசியல் வீழ்ச்சியின் மிகப்பெரும் குறியீடாக இருக்குமென்பதே உறுதியானதாகும்.

# 22,000 சமுர்த்தி உத்தியோகத்தர்களை வேலையிலிருந்து நீக்க அரசு திட்டம்?

(கொழும்பு)

நாடெங்கிலும் உள்ள 22,000 சமுர்த்தி உத்தியோகத்தர்களை சேவையில் இருந்து நீங்குவதற்கு அரசாங்கம் திட்டம வகுத்துள்ளதாக 'லக்ஷண' சிங்கள பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது.

நீக்கப்படும் உத்தியோகத்தர்களுக்குள் 2000 முகாமையாளர்கள் அடங்குவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டில் 8 லட்சம் மக்களின் சமுர்த்தி நிவாரணங்களை அரசு நிறுத்தியதால் அந்த மக்கள் பெரும் கஷ்டத்தை அனுபவித்து வருகின்றனர்.

இது சம்பந்தமாக சமுர்த்தி அபிவிருத்திச் சங்கத்தைச் சேர்ந்த எஸ்.எ.டி.ஜகத்குமார - அரசாங்கம் ஏதும் கொடுப்பனவுகளைக் கொடுத்து சேவையிலிருந்து இடைநிறுத்தினால் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று கூறியுள்ளார்.

இது உலக வங்கியின் சூழ்ச்சி என ஜகத்குமார மேலும் தெரிவித்தார்.

# வெளிநாட்டு வங்கிகளிடமிருந்து ரூ.3500 கோடியை கடனாகப் பெறுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை

(நமது நிருபர்)

இலங்கைக்கு வெளிநாட்டுக் கடன் வழங்கும் நிறுவனங்களிடமிருந்து 3500 கோடி ரூபா பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மத்திய வங்கி ஆளுநர் ஏ.எஸ்.ஜெயவர்த்தனா தெரிவித்துள்ளார்.

நூற்றுக்கு நான்கு வீத வட்டியுடன் இரு கட்டங்களாக இக் கடன் பெற்றுக் கொள்ளப்படும்.

சுவிஸ்லாந்திலுள்ள "யூனியன் வங்கி", ஜேர்மனியிலுள்ள " டொச் வங்கி" ஆகியவற்றிலிருந்து இரண்டாயிரம் கோடி ரூபாவும், யப்பானிலுள்ள "நெக்சி" வங்கியிடமிருந்து 1500 கோடி ரூபாவும் கடன் தருமாறு கோரப்பட்டுள்ளது.

இக்கடனில் ஒரு பகுதி வடக்கு- கிழக்கு அபிவிருத்திக்கு பயன்படுத்தப்படும் என்று மத்திய வங்கி ஆளுநர் மேலும் குறிப்பிட்டார்.

### கற்கோவளப் பிரதேச மக்கள்

# மிதிவெடிகளை அகற்றி மீளக்குடியமர அனுமதிக்குமாறு ரணிலுக்கு மகஜர்

(வடமராட்சி)

கற்கோவளப் பகுதியில் அண்மையில் படையினரால் மிதிவெடிகள் அகற்றப்பட்ட பகுதியில் புல்மேயச் சென்ற இரு மாடுகள் மிதிவெடியில் சிக்கி கால்களை இழந்துள்ளன.

இவ்வாறு மிதிவெடிகளின் அபாயம் உள்ள பகுதியிலுள்ள மிதிவெடிகளை அகற்றி இடம்பெயர்ந்த மக்கள் மீளக்குடியமர நடவடிக்கை எடுக்குமாறு பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதம் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

தும்பளை இலட்சுமணன் தோட்டப்பிள்ளையார் கோவில் தொண்டர் சபையினரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவிலுள்ள கற்கோவளம், புனிதநகர் மற்றும் அதனை அண்டியுள்ள பகுதிகளில் இராணுவத்தினரால் அமைக்கப்பட்ட மண்அணையை அண்டிய பகுதியில் புதைக்கப்பட்டுள்ள மிதிவெடிகள் இராணுவத்தினர் வெளியேறி இரு வருடங்களுக்கு மேலாகியும் இதுவரை பூரணமாக அகற்றப்படவில்லை.

மிதிவெடிகளை அகற்றுமாறு பலமுறை இப்பகுதி மக்கள் விடுத்து வந்த கோரிக்கைகளை அடுத்து குறுகிய இடத்தில் மட்டும மிதிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன. படையினரால் மிதிவெடிகள் அகற்றப்பட்ட இப் பகுதியில் புல்மேயச் சென்ற இருமாடுகள் கால்களை இழந்துள்ளன.

இதனால் இப்பகுதியில் இருந்து வெளியேறிய குடும்பங்கள் மிதிவெடி அபாயம் தீராமையால் மீளக்குடியமராது உறவினர்களின் வீடுகளில் தங்கியுள்ளனர்.

எனவே இப்பகுதியில் புதைக்கப்பட்ட மிதிவெடிகளை அகற்றி வெளியேறிய மக்கள் மீளக்குடியமர நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இராணுவத்தினர் இப்பகுதியிலிருந்து வெளியேறி இரண்டு வருடத்துக்கு மேலாகிய போதிலும் திடீரென இப்பகுதிக்கு சென்ற படையினர் சில இடங்களில் முட்கம்பி வேலிகளை போட்டுள்ளனர். இதனால் மிதிவெடி அபாயம் இல்லாத பகுதிகளில் குடியமர்ந்த மக்கள் கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கடந்த ஆறு வருடங்களுக்கு மேலாக இடைநிறுத்தப்பட்டுள்ள பருத்தித்துறை நாகர் கோவில் ஊடாக தாளையடி வரைக்கும் பஸ் செல்வதற்கு மூடப்பட்டுள்ள நாகர் கோவில் வீதிகளை திறந்து பஸ் சேவையை நடத்த நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

அத்துடன் தும்பளை மணியகாரன் சந்தி வீதி முப்பது வருடங்களுக்கு மேலாக திருத்தப்படாமையால் இப்பகுதி மக்கள் கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

எனவே இச்சம்பவங்கள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென இம் மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இம்மகஜரின் பிரதிகள் போக்குவரத்து நெடுஞ்சாலை அமைச்சர், பாதுகாப்பு அமைச்சர், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் ஆகியோருக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

# "நாம் வாழ" நாடகம் கொழும்பில் மேடையேறியது


முல்லைத்தீவுக் கச்சேரியால் தயாரிக்கப்பட்ட "நாம் வாழ" என்னும் நாடகம் இம்மாதம் 17,18,19 ஆம் திகதிகளில் கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்ட அனுசரணையுடன் நடைபெற்ற தேசிய வறுமை மாநாடு 2002 இல் மேடையேற்றப்பட்டது.

இணுவையூர் சிதம்பரதிருச்செந்திநாதனின் ஒருங்கிணைப்பில் தயாரிக்கப்பட்ட இந்த நாடகத்தினை குமுழமுனையைச் சேர்ந்த எஸ்.உதயசீலன் எழுதி நெறிப்படுத்தியுள்ளார். முல்லைத்தீவுக் கச்சேரியைச் சேர்ந்த வே.இரட்ணராஜா, ஜெயந்தி ஆகியோரும் முல்லைத்தீவு மாவட்ட ஆசிரியர்களான எஸ்.குணபாலன், எஸ்.பாஸ்கரன், தி.நடனசபேசன், கவிஞர் முல்லைக்கமல் ஆகியோர் இதில் நடித்துள்ளனர்.

திருமலைச்சந்திரனின் இசையமைப்புடன் தயாரிக்கப்பட்ட இந்நாடகம் கடந்த யூன் மாதம் திருகோணமலை . மாவட்டத்தில் நடைபெற்ற பிராந்திய வறுமை மாநாட்டில் முதற்தடவையாக மேடையேற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# போர் நிறுத்தக்கண்காணிப்பு குழுவின் அலுவலகம் நெடுந்தீவில் அமைப்பு

நெடுந்தீவில் அண்மையில் ஏற்பட்ட அசம்பாவிதங்களைத் தொடர்ந்து கண்காணிப்புக்குழு தனது அலுவலகம் ஒன்றை நெடுந்தீவு பிரதேசசபை விருந்தினர் தங்கு விடுதியில் திறந்து வைத்துள்ளது. நேற்று முன்தினம் காலை நெடுந்தீவுக்கு விஜயம் செய்த குழுவினர் இந்த அலுவலகத்தை திறந்து வைத்தனர். புதன்கிழமைகளில் இவ்வலுவலகத்தில் - இக் குழுவினர் முழுநேர செயற்பாட்டினை மேற்கொள்வார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது. (112)



# குறைதீர் மன்றம்

நமது ஈழநாடு

பிறவுண் றோட் 5ஆம் ஒழுங்கை குன்று குழிகளுடன் மிகவும் மோசமாகப் பழுதடைந்துள்ளது. இதற்கென மாநகர சபைக்கு கிடைத்த பணம் பிறிதொரு வேலைக்கு மாற்றப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மாணவர்களாகிய நாம், எமது போக்குவரத்துத் தேவைகளுக்கு மேற்படி ஒழுங்கையினையே பெரிதும் பயன்படுத்தி வருகின்றோம்.

மழைக்காலம் தொடங்கவுள்ள இவ் வேளையில் - அதற்கு முன்னர் வீதியினை செப்பனிட்டுக் கொள்ள முடியுமா?

S.வசந்தரூபி
யாழ்.பல்கலைக்கழகம்

தங்களது பிரச்சினை தொடர்பாக 'நமது ஈழநாடு' யாழ்.மாநகரசபையுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டது. இதன்போது அளிக்கப்பட்ட பதில்,

பிறவுண் வீதி 5ஆம் ஒழுங்கைக்கு என நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. திட்டமதிப்பீடு மட்டுமே செய்யப்பட்டிருந்தது. யுத்த சூழ்நிலையால் இடம் பெயர்ந்து மீளக் குடியமர்ந்த பகுதிகளைச் சேர்ந்த வீதிகளை திருத்துவதற்கே முன்னுரிமை வழங்குவது என மாநகரசபை உறுப்பினர்களால் தீர்மானிக்கப்பட்டது.

இனிவரும் காலங்களில் பிறவுண் வீதி 5ஆம் ஒழுங்கையை ஏற்கனவே வரையப்பட்ட திட்ட மாதிரிக்கேற்ப திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என மாநகர சபையினர் தெரிவித்தனர்.

# 89 இல் இந்தியப் படையினரால் கைதாகி காணாமற்போனவர் களுத்துறைச் சிறையில்!

## 13 வருடங்களின் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டார்

(கொழும்பு நிருபர்)

1989ஆம் ஆண்டு கிளிநொச்சிப் பகுதியில் இந்திய இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட பின்னர் காணாமல் போயிருந்த இளைஞர் ஒருவர் களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருப்பது கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:-

வட்டக்கச்சியைச் சேர்ந்த இளையபெருமாள் பத்மநாதன் என்பவர் இந்தியப் படையினரால் கைதாகி பின்னர் காணாமற் போயிருந்தார். கடந்த 13 வருடங்களாக இவரைப்பற்றிய தகவல்கள் ஏதும் தெரியவரவில்லை.

இது குறித்து வவுனியாவில் உள்ள மனித உரிமைகள் ஆணைக் குழுவின் அலுவலகத்திற்கு உறவினர்கள் முறைப்பாடு செய்திருந்தனர். இதையடுத்து மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகள் எடுத்த மேல் நடவடிக்கையைத் தொடர்ந்தே காணாமற்போயிருந்ததாக கருதப்பட்ட நபர் களுத்துறைச் சிறையில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு இருக்கின்றது.

இது தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழு உறவினர்களுக்கு தகவல் தெரிவித்துள்ளதுடன், சிறைக்குச் சென்று அவரை பார்வையிடுவதற்கான ஒழுங்குகளை செய்வதாகவும் உறுதியளித்துள்ளார். (01)

## பனையால் விழுந்து சீவல் தொழிலாளி மரணம்!

(கைதடி)

நாவற்குழி கிழக்கைச் சேர்ந்த செ.செல்வநாயகம் (வயது 44) என்ற சீவல் தொழிலாளி தொழிலிற்காக பனைமரத்தில் ஏறியவேளை தவறுதலாக கீழே விழுந்து, அந்த இடத்திலேயே மரணமானார். இவர் மூன்று பிள்ளைகளின் தந்தை ஆவார். இச் சம்பவம் கடந்த சனியன்று இடம் பெற்றுள்ளது. (31)

## மாகாண மட்ட ஆங்கில தின போட்டிகள்

(மீசாலை)

மாகாண மட்ட ஆங்கில தினப் போட்டிகள் இம்மாதம் 31 ஆம் திகதியும், அடுத்தமாதம் முதலாம் திகதியும் திருகோணமலையில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது. (25)

## பருத்தித்துறையில் கடும் காற்று இரு மீன்பிடிப் படகுகள் சேதம்!

(புலோலி)

பருத்தித்துறை கடற்கரையில் கடந்த திங்கட்கிழமையன்று வீசிய கடும் காற்றினால் மீனவர்களின் படகுகள் சேதமடைந்தன.

பருத்தித்துறை வியாபாரி மூலைப் பகுதியில் மயிலிட்டி, காங்கேசன்துறை ஆகிய இடங்களில் இருந்து இடம்பெயர்ந்து வந்து தொழில்புரியும் மீனவர்களின் படகுகளே, கடலுக்குச் சென்று விட்டுத் திரும்புகையில் வீசிய கடும் காற்றினால் முருகைப்பாறைகளுடன் மோதுண்டு சேதமடைந்தன. இரண்டு படகுகள் சேதடைந்தபோதும் மீனவர்கள் காயங்கள் எதுவுமின்றி தப்பியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (15)

## ரத்வத்தவைக் கொல்ல முயற்சித்ததாக குற்றஞ்சாட்டப்பட்டவர் விடுவிக்கப்பட்டார்!

(கொழும்பு நிருபர்)

முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தவைக் கொலை செய்வதற்காகத் திட்டமிட்டு வந்தார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டு, கைதாகியிருந்த இளைஞரைக் கொழும்பு மேல்நீதிமன்றம் விடுதலை செய்திருக்கிறது.

சதாசிவம் கேதீஸ்வரன் என்ற இளைஞரே விடுதலை செய்யப்பட்டவராவார். இவர் 1997 ஏப்ரல் முதலாம் திகதிக்கும் 1998 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 15 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில், ஜெனரல் அனுருத்த ரத்வத்தவின் நடமாட்டங்களை அவதானித்து, அவரைக் கொலை செய்வதற்குத் திட்மிட்டதாகச் சட்டமா அதிபரால் வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

இந்த வழககு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, குறிப்பிட்ட சந்தேக நபரின் ஒப்புதல் வாக்குமூலம் சுயமாகப் பெறப்பட்டதென்பதைப் பொலிஸாரால் நிரூபிக்க முடியவில்லை எனக்கூறிய மேல் நீதிமன்றம் இவரை விடுதலை செய்துள்ளது. (01)

## பத்திரனவுக்கு பதிலாக கிங்ஸ்லியை எம்.பியாக்க சுதந்திரக்கட்சி திட்டம்?

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரிச்சர்ட் பத்திரன கட்சியில் இருந்து நீக்கப்பட்டால், அவருக்குப் பதிலாக நாடாளுமன்ற உறுப்பினராக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் கிங்ஸ்லி விக்கிரமரத்ன நியமனம் செய்யப்படலாம் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதுபற்றி கிங்ஸ்லி விக்கிரமரத்னவிடம் வினவியபோது, தனக்கு இது பற்றி எதுவும் தெரியாது என அவர் தெரிவித்துள்ளார்.

விக்கிரமரத்ன காலியைச் சேர்ந்தவரானதால், அவரின் இந்நியமனத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்போவதில்லை என்று தென் மாகாண சபை முதலமைச்சர் அமரசிறி தொடங்கொட தெரிவித்துள்ளார்.

ரிச்சர்ட் பத்திரன மற்றும் சில பொ.ஐ.மு. நாடாளுமன்ற உறுப்பினர்கள் பொ.ஐ.முவில் இருந்து விலகி, ஐ.தே.கவுக்கு ஆதரவளிக்கவிருப்பதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

பொ.ஐ.முன்னணியில் இருந்து கொண்டு ஐ.தே.கவுக்கு ஆதரவளிப்போர் பட்டியலில் ரிச்சர்ட் பத்திரனவும் இருப்பதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பகிரங்கமாக கூட்டமொன்றில் உரையாற்றியிருந்தாரென்பதும் குறிப்பிடத்தக்கது.



விபத்துக்குள்ளாகி வீழ்ந்த விமானப்படையின் கிபிர் ஜெட் விமானத்தின் விமானி பரசூட் மூலம் குதித்தபோது, குளியாப்பிட்டிய நக்காவத்தையில் தென்னைமரம் ஒன்றில் அவரது பரசூட் சிக்கியது. பொதுமக்களின் உதவியுடன் அவர் மீட்கப்பட்டார். பரசூட் தென்னையில் சிக்கியிருப்பதைப் படத்தில் காணலாம்.

## உயர் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு சொந்தக் கட்டடம் தாருங்கள்!

### அரச அதிபரிடம் மகஜர் கையளிக்க ஏற்பாடு

(இளவாலை)

தனியார் குத்தகைக் காணியில் இயங்கி வரும் உயர் தொழில் நுட்ப நிறுவனத்திற்கு நிரந்தரமாக ஒரு காணியைக் கொள்வனவு செய்து கட்டடம் அமைத்துத் தரும்படி கோரி - யாழ். அரச அதிபரிடம் மகஜர் ஒன்று கையளிக்கப்படவுள்ளது.

96 ஆம் ஆண்டிற்கு முன்னர் யாழ்.தொழில் நுட்பக் கல்லூரியில் ஓர் அலகாக இயங்கி வந்த "உயர் தொழில்நுட்ப டிப்ளோமா" கற்கை நெறிகள் - 96 ஆம் ஆண்டிற்குப் பின்னர் தனி அலகாகப் பிரிக்கப்பட்டு "உயர் தொழில்நுட்ப நிறுவனம்" எனப் பெயர் மாற்றப்பட்டு - 98ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை தனியார் காணியில் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாக முன்னரும் பல முறை மகஜர்கள் கையளித்தும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. (41)

## புதிய தேர்தல் முறையின் கீழ் தெல்லிப்பழை கூட்டுறவு சங்கத்தின் 34 கிளைக் குழுக்கள் தெரிவு!

(வலி. வடக்கு)

தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைக் குழுக்களுக்காக புதிய விதிமுறைகளின் கீழ் முதல் தடவையாக இடம்பெற்ற தேர்தலில் 34 கிளைக் குழுக்களின் தெரிவுகள் இடம்பெற்றுள்ளன. 8 கிளைகளுக்கான தெரிவு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்கத்தின் 44 கிளைகளில் 42 கிளைகளுக்கான தேர்தல் - யாழ். கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரால், மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி, சங்கத் தலைமையகம், மல்லாகம் மகா வித்தியாலயம், ஆவரங்கால் மகாஜன மகா வித்தியாலயம், இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம் ஆகிய இடங்களிலும், சில கிளை நிலையங்களிலும் நடத்தப்பட்டது.

இதன்போது 34 கிளைக் குழுக்களின் தெரிவுகள் இடம்பெற்றுள்ளன. ஏனைய 8 கிளைக் குழுக்களுக்கு கோரம் போதாமையால் தெரிவு இடம்பெறவில்லை.

இந்த 8 கிளைகளுக்கும் பிறிதொரு தினத்தில் தேர்தல் இடம் பெறுமெனவும், அக்கிளை உறுப்பினர்கள் தவறாது பங்குபற்றி கிளைக்குழுவை தெரிவு செய்யுமாறு சங்கத் தலைவர் இ.சாம்பசிவம் கோரிக்கை விடுத்துள்ளார்.

## திருட்டுச் சந்தேக நபரைப் புலிகளிடம் கையளித்தவர் பொலிசாரால் விசாரணை

(இளவாலை)

இளவாலைப் பகுதியில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவத்தோடு தொடர்புடையதாக சந்தேகிக்கப்பட்ட சிறுவனை, விடுதலைப்புலிகளிடம் ஒப்படைத்தமைக்காக கடை உரிமையாளர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

திருட்டுடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்பட்ட சிறுவனின் உறவினர் பொலிசாருக்கு முறைப்பாடு செய்ததை அடுத்தே இவர் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.(41)

## யாழ். செயலகத்தின் ஓய்வூதியப் பிரிவு பிரதேச செயலகங்களுக்கு மாற்றம்!

(நெல்லியடி)

மாதாந்த ஓய்வூதியத்தை அவ்வப் பிரதேச செயலகங்களூடாகப் பெறக் கூடிய வகையில் புதிய திட்டமொன்று நடைமுறைப்படுத்தபபட்டுள்ளது.

இதுவரை யாழ்.செயலகத்தில் இயங்கி வந்த கணிப்பீட்டுக் கிளைக் குழு மூடப்பட்டதையடுத்து, மேற்படி திட்டம் மாற்றியமைக்கப்பட்டு, ஊழியர்களின் சுயவிபரக் கோவைகள் யாவும் அவ்வப் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இனி ஓய்வூதியர்களின் கணிப்பீடு, பணிக்கொடை தொடர்பான வேலைகளை அவர்கள் கடமையாற்றிய திணைக்களங்கள், உள்ளூராட்சி சபைகள் என்பன செய்து கொடுத்தபின் - அதற்கான ஓய்வூதியங்கள் அந்தந்த பிரதேச செயலகங்களாலேயே வழங்கப்படவுள்ளன.

இத்திட்டம் வடக்கு-கிழக்கு மாகாணம் தவிர்ந்த ஏனைய இடங்களில் ஏற்கனவே நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளபோதும், வடக்கு-கிழக்குப் பகுதிகளில் கடந்த யூன்மாதம் முதலே இத்திட்டத்தை செயன்முறைப்படுத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. இத்திட்டத்தின் கீழ் விரைவாக ஓய்வூதியத்தை பெற்றுக்கொள்ள முடியுமென நம்பப்படுகிறது. (13)

## அமெ. உதவி அமைச்சர் கொழும்புக்கு விஜயம்!

(கொழும்பு நிருபர்)

தெற்காசியாவுக்கான அமெரிக்க உதவி ராஜாங்க அமைச்சர் டொனால்ட் காம்ப் நேற்று இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டு கொழுமபு வந்துள்ளார்.

இவர் நாளை வரை கொழும்பில் இருப்பாரெனவும் - அக்காலப்பகுதியில் அரசியல் தலைவர்கள், அரச சார்பற்ற நிறுவன அதிகாரிகள், வர்த்தகப் பிரமுகர்கள் மற்றும் தனிநபர்களைச் சந்தித்துப் பேச்சுக்களை நடாத்துவார் எனவும் அமெரிக்க தூதரகம் அறிவித்துள்ளது. இந்த சந்திப்புக்களின்போது இருதரப்பு உறவுகள் குறித்துப் பேசப்படுமென அமெரிக்க தூதரகம் அறிவித்துள்ளது.

# இரத்தக்கறை படிந்த ஒரு மொழியைப் பேசுபவனாக நான் வெட்கப்படுகின்றேன்!

*தமிழ்க்கூடல் நிகழ்வில் 'சிங்களப் பத்திரிகைகளின் போக்கு' பற்றி உரையாற்றிய 'ஹிரு' சிங்களப் பத்திரிகை ஆசிரியர் பீடத்தைச் சேர்ந்த ரோஹித பாசன அபேவர்த்தனவின் உரை இது.* **தமிழில்: சுவாமி.**

*(நேற்றைய தொடர்ச்சி...)*

1995ம் ஆண்டு ஏப்ரல் 19ம் திகதியில் மீண்டும் யுத்தம் ஆரம்பமானதுடன் பத்திரிகை யுத்தத்திற்கு எதிரான மிகத் தெளிவான நிலைப்பாட்டில் இருந்து செயற்பட வேண்டும் எனத் தீர்மானித்தோம். அது எமது வாழ்க்கையை முற்று முழுதாக மாற்றக்காரணமாகுமென நாங்கள் நினைக்கவில்லை.

எமது அந்த நிலைப்பாடு காரணமாக முதலாவதாக நாங்கள் எமது அலுவலகத்தில் இருந்து கணினிகளைப் பறிகொடுத்தோம். எங்களுக்கு அவற்றை வழங்கியவர்களே மீண்டும் எடுத்துச் சென்றனர். அதற்குப் பின் நாம் எமது சந்தையை இழந்தோம். சரியான விதத்தில் சொன்னால் திட்டமிட்டபடி எமது சந்தை முறியடிக்கப்பட்டது. சம்பளம் வழங்கிக் கொண்டு இனிமேலும் பத்திரிகையை நடாத்த முடியாதது என எமக்குப் புரிந்தது.

எனவே மாதாந்த சம்பள முறைக்குப் பதிலாக பிரயாணப்படி மாத்திரம் வழங்கினோம். ஆயினும் அந்த வழியால் கூடப் பத்திரிகைக்குப் பாதுகாப்புச் செய்ய முடியவில்லை. 1995ம் ஆண்டு யூன் மாதத்தில் நவாலி சென்.பீற்றர் ஆலயம் மீது நடாத்தப்பட்ட குண்டுத் தாக்குதல் காரணமாக உயிரிழந்த சிறுமியின் புகைப்படம் ஒன்று நாம் எமது பத்திரிகையின் முற்பக்கத்தில் பிரசுரித்தோம். இந்தப் புகைப்படம் பிரசுரித்ததன் காரணமாக 'ஹிரு' என்பது, புலிகளின் பத்திரிகை எனக் கூறத்தொடங்கினர். ஊடகங்களுக்கும் யுத்தத்திற்கும் இடைவெளி தொடர்பாக வேறொரு முறையில் சிந்திப்பதற்கு நாங்கள் தொடங்கினோம். அதன் தொடர்பாக எமது சில அவதானிப்புக்கள் இந்தக்கால கட்டத்தில் தொடங்கின. பொ.ஐ.முன்னணி அரசின் முதலாவது செய்தித் தணிக்கை அமுலுக்கு கொண்டு வருவது தொடர்பாக பத்திரிகையாளர் மாநாட்டுக்கு நாங்களும் சென்றோம். கொழும்பு-3இல் தகவல் திணைக்களக் கட்டிடத்தில் கலந்துரையாடல் நிகழ்ந்தது. தணிக்கை உத்தியோகத்தர் ஜயசிங்க மற்றும் ஊடக அமைச்சரைச் சூழ்ந்து கொண்டு உத்தியோகஸ்தர்கள் அமர்ந்து இருந்தனர். ஐம்பதுக்கும் அதிகமான ஊடகவியலாளர்கள் மத்தியில் தணிக்கை தொடர்பான வர்த்தமானி அறிக்கை வாசிக்கப்பட்டது. கேள்வி கேட்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

தணிக்கை கொண்டு வந்த அநீதிபற்றி எவரும் கேள்வி எழுப்பவில்லை. தணிக்கை கொண்டுவர அரசின் உரிமை என்ன என கேள்வி கேட்கவில்லை. செய்தியைக் கையில் கொண்டு வராமல் பக்ஸ் பண்ணி தணிக்கையைச் செய்ய முடியுமா? என தேசியப் பத்திரிகை ஒன்றின் ஊடகவியலாளர் கேள்வி எழுப்பினார். அதிகாலையில் பிரதியைக் கொண்டு வந்தால் குறுகிய காலத்தில் தணிக்கை செய்து தரமுடியுமா? எனவும் கேள்வி கேட்டனர்.

வடக்கில் பயங்கரவாதிகள் எனக்கூறாமல் போராளிகள் எனக்கூறி வந்தோம். இனிமேலும் அவ்வாறு பயன்படுத்த முடியுமா? என இலத்திரனியல் ஊடகவியலாளர் கேள்வி கேட்டார். தணிக்கைக்கு எதிரான எமது பெரும்பாலான ஊடகவியலாளரின் போராட்டம் இவ்வாறு இருந்தது.

செக்(செக்கோஸ்லாவியா)கைச் சேர்ந்த ஒரு எழுத்தாளரான டெனர் உர்பாணிக் இவ்வாறு கூறினார் - 'தணிக்கை உத்தியோகஸ்தர் இனி அவருடைய மேசையில் இல்லை. எனது தலைக்குள்ளே இருக்கிறார்'. **(The Censor officer is no longer at his desk. He is in my head)** எமது ஊடகவியலாளரிடையே தணிக்கையாளர்தான் மிகவும் பலமுள்ளவர்.

2000ஆம் ஆண்டில் பிரசன்ன விதானகே என்ற இயக்குனரின் "உரகந்த களுவர" **(Death in full moon day)** என்ற திரைப்படம் இராணுவத்தினரின் மனநிலை பாதிக்கப்படுகின்றது என்ற காரணத்தைக் காட்டி தடை செய்யப்பட்டது. அது பற்றி பிரசன்னா விதானகே முக்கியமாகப் பதிலளித்தார். பாதுகாப்புப் படையின் மனநிலையை மேம்படுத்துவது பாதுகாப்பு அமைச்சின் செயலொழிய சினிமாக்காரரின் செயற்பாடு அல்ல என அவர் கூறினார். செய்தித் தணிக்கையின் போது அளவுகோல் பற்றி எவரும் கேள்வி எழுப்பவில்லை. தேசிய தேவை ஆகிய பலவித காரணங்கள் காட்டித் தணிக்கை அமுலாக்கப்படுகின்றது. ஆயினும் இந்த தவறான கருத்துகளுக்கு எதிராக சவால் விடுப்பதற்கு ஒருவர் முன்வரும்போது இந்தக் கூற்றுக்களில் உள்ள பொய்யானது வெளிவரும்.

தணிக்கை தொடர்பாக சுவராஸ்சியமான கதை ஒன்று கூறவிரும்புகின்றேன். 1995ஆம் ஆண்டில் பொ.ஐ.முன்னணி செய்தித்தணிக்கையைக் கொண்டு வரும்போது கொழும்பில் இருந்து வரும் சரிநிகர் பத்திரிகையாளர் தணிக்கைக்கு அனுப்பினார்.

வடக்கு கிழக்கில் நடக்கும் மனித உரிமைகள் தொடர்பான செய்திகள் அத்தகவலில் உள்ளாகியிருந்தது. அதனால் முழுமையாகவே தணிக்கையானது சரிநிகர் பத்திரிகையின் தோழர்கள் என்னுடன் இது பற்றிக் கூறினர். தணிக்கைக்கு உள்ளாக்கப்பட்ட கட்டுரையை வாங்கிக் கொண்ட நாம் அதில் எந்த மாற்றமும் செய்யாமல் சிங்களத்துக்கு மொழிபெயர்ப்புச் செய்து மீண்டும் தணிக்கை அதிகாரிக்கு அனுப்பினேன். தணிக்கை அதிகாரி ஒரு சொல்கூட தணிக்கை செய்யாமல் கட்டுரைக்கு அனுமதி தந்தார். நாங்கள் ஹிரு பத்திரிகையின் முற்புறத்தில் பிரசுரித்தோம். அதனால் தலையங்கம் இவ்வாறு இருந்தது. "தணிக்கை அதிகாரியால் தணிக்கை செய்யப்படவில்லை" ஆயினும் ஒருவரும் இந்த கேலிக்கிடமான கொள்கை பற்றி சவால் விடுக்கவில்லை. 1995ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்தில் நாகர்கோவில் இந்து மகா வித்தியாலயம் மீது விமானத் தாக்குதல் நடத்தப்பட்ட போது நாம் அதுபற்றி எழுதினோம். ஆயினும் அந்தக் காலத்தில் தணிக்கை இருந்தது. உண்மையான காரணம் யாதெனில் நாங்கள் சவால் விடத்தயாராக இல்லை என்பதுதான். யுத்தம் நிறுத்தப்பட்ட காலகட்டத்திலும் கூட கொழும்பிலுள்ள ஊடகங்கள் யுத்தத்தினை நடத்திக் கொண்டே போகின்றன. மீண்டும் யுத்தம் தொடங்கும் வரை மக்களுடைய தலைக்குள் யுத்தத்தினை நடாத்திக் கொண்டு போவது தமது கடமையாகவே பத்திரிகைகள் கருதுகின்றன. அதனடிப்படையில் செய்திகள் தெரிவு செய்யப்படுகின்றன. பெரியளவிலான ஊடகங்களில் செய்திகளைப் பதிவு செய்வது என்ற ஒன்றில்லை. செய்திகளை உருவாக்குவது ஒன்றே உள்ளது. அதற்குத் தேவையான மூலப்பொருட்கள் எடுத்துச் கொள்வதற்கு மாத்திரம் நிகழ்வுகள் பயன்படுத்தப்படுகின்றன. அச் செய்திகள், உண்மைக்கு மாத்திரமில்லாது பொது அறிவுக்குக்கூட புறம்பானது எனவும் கூறலாம். ஆயினும் அவைதான் செய்தி அறிவிப்புக்கள் எனக்கூறுகின்றனர்.

நான் ஒரு உதாரணம் கூறவிரும்புகின்றேன். கொழும்பிலிருந்து வெளிவரும் 'லக்ஷன' என்ற சிங்கள வாராந்தப் பத்திரிகையில் மிக சமீபத்தில் சமாதானப் பேச்சுவார்த்தை பற்றிக் கட்டுரை ஒன்று இருந்தது. அதில் முக்கியதான விடயம் விடுதலைப் புலிகள் அமைப்பு ஒரு போதும் நம்பமுடியாத அமைப்பு என்பது ஆகும். விடுதலைப் புலிகள் ஒரு போதும் யுத்தத்தினைக் கைவிடமாட்டார்கள் என்பதும் ஆகும். அதனை உறுதிப்படுத்துவதற்கு அந்தக் கட்டுரையாளர் ஓர் அனுபவம் ஒன்றை எடுத்துக் காட்டுகிறார்.

செய்தியாளர் கிழக்கு மாகாணத்திற்கு சென்ற போது விடுதலைப் புலிகளின் அமைப்பின் ஒரு அலுவலகத்திற்குப் போயுள்ளார். அலுவலகமாப் பயன்படுத்தப்பட்ட அவ்வீட்டின் முன்பக்கத்தில் உள்ள சாய்மனைக்கதிரையில் நித்திரை செய்து கொண்டிருந்த புலி உறுப்பினர் ஒருவர் இந்தக் கட்டுடரையாசிரியர் வீட்டுக்குள் நுழையும் போது நின்றிருந்தார்.

*(தொடரும்..)*

# அதிர்ஷ்ட வாரம்

## 25.10.2002 தொடக்கம் 31.10.2002 வரை



### மேடம்

**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்**

இந்த ராசியிற்பிறந்தவர்கட்கு, இவ்வாரம் நன்மையும் தீமையும் கலந்த வாரமாகவே காணப்படும். பணவரவு குறைவு, வரவுக்கு மிஞ்சிய செலவு, பெண்களினால் தேவையற்ற சண்டை, வைத்தியச் செலவு. சனி, ஞாயிறு, திங்கள் ஆகிய தினங்களில் எடுத்தகாரியம் வெற்றி, மகிழ்ச்சி, சுபமங்கள வைபவங்களில் பங்குபற்றல், ஆடையாபரண மகிழ்ச்சி முதலிய நற்பலன்களும், வார இறுதியில் தீயபலன்களையும் எதிர்பார்க்கலாம். உடனலத்தில் அக்கறை கொள்ள வேண்டும். மாதாவுக்கு தேகசுகக் குறைவு, புத்திர சுகக்குறைவு, திருமணப் பேச்சு திருப்திகரமாக இல்லை. கணவன் மனைவி தேகசுகக் குறைவு, பிதாவுக்கு தேகசுகக் குறைவு. எனினும் பணவரவு, தொழில் வருவாய் திருப்தி. மாணவர்களுக்கு சிறந்த வாரமல்ல. வர்த்தகர்களுக்கு சிறந்த வாரமல்ல. இறைவழிபாடு, நவக்கிரகவழிபாடு செய்யவும்.

### இடபம்

**கார்த்திகை, 2,3,4 ஆம் பாதம், ரோகிணி, மிருகசீரிடம், 1,2ஆம் பாதம்.**



இந்த ராசியிற் பிறந்தவர்கட்கு இவ்வாரம் மத்திமபலனையே எதிர்பார்க்கலாம். நெருங்கிய உறவினர்களுக்கு சுபமங்கல வைபவம் நடைபெறுதல் எனினும் மகிழ்ச்சியுடன் பங்குபற்றும் சந்தர்ப்பம் குறைவாக இருக்கும். வரவுக்கு மிஞ்சிய செலவு, தேகசுகக்குறைவு, மனச் சோர்வு, காயங்கள் ஏற்படுதல் முதலிய தீய பலன்கள் உண்டாம். மாதாவுக்கு தேகசுகக் குறைவு, வாகனங்களால் செலவு, புத்திரர் தேகசுகம் நன்று. திருமணப் பேச்சு சிறிது முன்னேற்றம் காணலாம். கணவன் மனைவி ஒற்றுமை சமமாக இருக்கும். பிதாவின் தேகசுகம் நன்று. செய் தொழிலின் பலன் சாதாரணமாக இருக்கும். தொழில் ஸ்தானத்தில் சமமான பலனைக் காணலாம். மாணவர்களுக்கு சிறந்த வாரம், வர்த்தகர்களுக்கு சிறந்த வாரம்.



### மிதுனம்

**மிருகசீரிடம் 3,4ஆம் பாதம் திருவாதிரை, புனர்பூசம் 1,2,3ஆம் பாதங்கள்**

இந்த ராசியிற் பிறந்தவர்கட்கு இவ் வாரம் நன்மையும் தீமையும் கலந்த வாரமாக காணப்படும். வார ஆரம்பத்தில் நான் என்ற கர்வ நிலை உருவாகும். அது உருவாகி விஷமத்தனமான செலவுகள், தேவையற்ற பகை முதலியன தோன்றும். அதனால் மனக் கவலை வந்து நீங்கி வார இறுதி நாட்களில் எடுத்த காரியம் வெற்றியடைதல் பணவரவு, பெண்கள் புத்தாடை புனைவதில் மகிழ்ச்சி காண்பர். மாதா சுகம் நன்று எனினும் மனக் கவலையுடன் சிறிது கண்ணோய் தோன்றும். புத்திரர் தேகசுகக் குறைவு. திருமணப் பேச்சுக்கள் தாமத நிலையை அடையும். கணவன் மனைவி தேகசுகம் மத்திமம், வார இறுதியில் மகிழ்ச்சி, பிதா வார ஆரம்பத்தில் தேகசுகக்குறைவு, பின் மகிழ்ச்சி. செய்தொழில் முன்னேற்றம். தொழிலஸ்தானத்தில் சக ஊழியர்களின் அன்பும் ஒத்துழைப்பும் கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வி முன்னேற்றம். வர்த்தகர்களுக்கு சிறந்தவாரம்.

### கர்க்கடகம்

**புனர்பூசம் - 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**



இந்த ராசியில் பிறந்தவர்கட்கு இவ்வாரம் பெரும்பாலும் நன்மையான வாரமாக காணப்ப டுகின்றன. பணவரவு, பிரிந்த நண்பர்கள் சேருவார்கள். மகிழ்ச்சி நங்கையர் வாழ்வில் மகிழ்ச்சி குலுங்கும். மனதில் சிறிய கர்வம் வந்து நீர்க்குமிழி போல் மறையும். தேக சுகத்தில் சிறிய தாக்கம் காட்டும். மாதா தேக சுகக் குறைவு, பணவரவு, புத்திரர் தேகசுகம் நன்று. சில சமயங்களில் தகாத உறவினால் பாதிக்கப்படுதல். திருமணப் பேச்சுக்கள் வேகம் குறைந்த நிலையில் காணப்படும். கணவன், மனைவி மகிழ்ச்சியுடன் இருப்பர். பிதா தேகசுகம் நன்று. கண்ணில் சிறிது நோய். செய் தொழில் மத்திமமான நிலையில் உள்ளது. தொழில்ஸ்தானத்தில் தொழில்கள் வேகம் குறைந்து காணப்படும். மாணவர்கள் கல்வியில் ஊக்கம் காட்ட வேண்டும். வர்த்தகர்களுக்கு மத்திமமான வாரம்.



### சிங்கம்

**மகம், பூரம், உத்தரம் 1ஆம் பாதம்**

இந்த ராசியில் பிறந்தவர்கட்கு இவ்வாரம் பணவரவு, பொதுசேவையில் மதிப்பு, சுபகாரியங்களில் பங்குபற்றல் வெளியூர் பயணங்கள், அறிஞர்கள் சகவாசம், தெய்வவழிபாடு, பெண்களினால் மகிழ்ச்சி முதலிய நற்பயன்களுடன் ஆரம்பித்து உணவு அஜீரணம், நித்திரைக் குறைவு, தேவையற்ற வாக்குவாதம், அயலவர்களுடன் பகை முதலிய தீய பலன்களுடன் முடிவடைகின்றன. மாதா தேகசுகம் நன்று. பிதாவின் தேகசுகம் மத்திமம். செய்தொழில் முன்னேற்றம், தொழில்ஸ்தானத்தில் சக ஊழியர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். மாணவர் கல்வியில் ஊக்கம் காட்டவேண்டும். வர்த்தகர்களுக்கு நல்ல வாரம்.

### கன்னி

**உத்தரம், 2,3,4 ஆம் பாதம், அத்தம், சித்திரை 1, 2ஆம் பாதம்**



இந்த ராசியில் பிறந்தவர்கட்கு இவ்வாரம் பண வரவு, மக்களினால் கௌரவப்படுதல், வாக்கு சாதுரியத்தினால் மற்றவர்களை மகிழ்வித்தல், மற்றவர்கள் வியக்கும் படி பொதுக் கருமங்கள், சுப கருமங்கள் நடாத்துதல், சமய அறிஞர்கள் சகவாசம், பெண்களின் வார்த்தைகளில் மகிழ்வடைதல் முதலிய நற்பலன்களுடன் ஆரம்பித்து தேவையற்ற செலவு, வெட்டுக்காயங்கள், நெருப்புக்காயங்கள் முதலிய தீய பலன்களுடன் முடிவடையும். மாதாவிற்கு தேகசுகக் குறைவு, திருமணப் பேச்சு முன்னேற்றம், பிதா தேகசுகக் குறைவு, மாணவர்களுக்குச சிறந்த வாரம். வர்த்தகர்களுக்குச் சிறந்த வாரம்.



### துலாம்

**சித்திரை 3,4ஆம் பாதம், சுவாதி, விசாகம் 1,2,3ஆம் பாதம்**

இந்த ராசியிற் பிறந்தவர்கட்கு இவ்வாரம் தேகசுகக் குறைவு, வைத்தியச் செலவு மனதில் தேவையற்ற பய உணர்வுகள் ஏற்படுதல் முதலிய தீய பலன்களுடன் ஆரம்பித்து தெய்வ வழிபாடு, சமய அறிஞர்கள் தரிசனம், பண வரவு, நெருங்கிய உறவினர்களுக்கு திருமண வைபவம் நடத்தல். பெண்கள் புதிய ஆடை அணிவதில் மகிழ்ச்சி, முதலிய நற்பலன்களுடன் முடிவடையும். மாதா தேகசுகம் நன்று. புத்திரா தேகசுகக் குறைவு. திருமணப் பேச்சு வெற்றி காணும், கணவன், மனைவி தேகசுகம் நன்று. பிதா தேகசுகம் நன்று. செய்தொழில் மத்திம நிலையில் இருக்கும். தொழிலஸ்தானத்தில் தொழில் மத்திம நிலையில் இருக்கும். மாணவர்களுக்கு சிறந்த வாரம்.

### விருச்சிகம்

**விசாகம்- 4, அனுஷம், கேட்டை**



இந்த ராசியிற் பிறந்தவர்கட்கு இவ் வாரம் சுபமான வாரமல்ல. சுபமான காரியங்கள் நிர்ணயங்கள் செய்வது, புதிய கருமங்களில் ஈடுபடுவது, புதிய ஒப்பந்தங்கள் முதலியவற்றை தவிர்த்தல் நன்று. தேகசுகக் குறைவு, வைத்தியச் செலவு, தேவையற்ற பய உணர்வுகள் முதலிய பலன்கள் உண்டாம். மாதா தேக சுகக் குறைவு. புத்திர சுகம் நன்று, திருமணப் பேச்சுக்கள் சிறப்பாக அமையும். கணவன் மனைவி தேக சுகம் மத்திமம், பிதா தேக சுகம் நன்று, செய் தொழில் மத்திமநிலை, தொழில் ஸ்தானத்தில் தொழில் மந்தநிலையில் காணப்படும். மாணவர்களுக்கு சிறந்த வாரம். வர்த்தகர்களுக்கு சிறந்த வாரமல்ல. இறை வழிபாடு நவக்கிரக வழிபாடு செய்யவும்.




### தனு

**மூலம், பூராடம், உத்தராடம் 1ஆம் பாதம்**

இந்த ராசியில் பிறந்தவர்க்கு இவ்வாரம் சிறந்த வாரமாக தென்படுகின்றது. பணவரவு, தேகசுகம் நன்று, எதிரிகள் தாமாகவே ஒதுங்குவார்கள், கௌரவம், வாகன பலம், சுபமங்கல நிகழ்ச்சிகளில் பங்கு, பெண்கள் புதிய ஆடைகள், ஆபரணங்கள் அணிந்து மகிழ்தல் முதலிய நற்பலன்கள் நிகழும். மாதா தேகசுகம் நன்று, புத்திரர் சுகம், திருமணப் பேச்சுக்கள் சிறப்பாக இருக்கும். கணவன் மனைவி தேக சுகம் நன்று, பிதா தேகசுகக் குறைவு வைத்தியச் செலவுகள் இடம்பெறலாம், செய் தொழில் முன்னேற்றம், தொழிஸ்தானத்தில் மேலதிகாரிகளின் பாராட்டுக்கள் கிடைக்கும். மாணவர்களுக்கு சிறந்தவாரம், வர்த்தகர்களுக்கு சிறந்தவாரம்.

### மகரம்

**உத்தராடம் 2, 3,4 ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1,2ஆம் பாதம்**



இந்த ராசியில் பிறந்தவர்க்கு இவ்வாரம் பணவரவு, தேகசுகம் நன்று, எதிரிகள் தாமாகவே ஒதுங்குவர், வாகன பலன், நெருங்கிய உறவினருக்கு திருமணம் நடைபெறுதல், கௌரவம், பெண்கள் ஆடை, ஆபரணம் அணிவதில் மகிழ்ச்சி, வாகன பலன், வெளியூர்ப் பயணம், தெய்வ வழிபாடு முதலிய நற்பலன்களை மகிழ்ச்சியாக அனுபவிக்கலாம். மாதா தேகசுகக் குறைவு, புத்திரர் தேகசுகக் குறைவு, திருமணப் பேச்சுக்கள் தாமதமடையலாம். கணவன் மனைவி மகிழ்ச்சியாக இருப்பர். பிதா தேகசுகம் நன்று, தெய்தொழில் முன்னேற்றம், தொழிஸ்தானத்தில் சக ஊழியர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். மாணவர் கல்வியில் ஊக்கம் காட்ட வேண்டும். வர்த்தகர்களுக்கு சிறந்த வாரம்.



### கும்பம்

**அவிட்டம், 3,4ஆம் பாதம், சதயம், பூரட்டாதி, 1,2,3ஆம் பாதம்**

இந்த ராசியில் பிறந்தவர்க்கு இவ்வாரம் கீர்த்தி குறைவு, தேக சுகக் குறைவு, வைத்தியச் செலவு முதலிய தீய பலன்களுடன் ஆரம்பித்து நோய் குணமடைந்து மகிழ்ச்சியுடன் பொதுவேலையில் நற்பெயரெடுத்து சுபமங்கள வைபவங்களைப் பற்றி தெய்வ தரிசனத்துடன் கழிக்கலாம். மாதா தேகசுகக் குறைவு, புத்திரர் சுகம், திருமணப் பேச்சுக்களில் முன்னேற்றமடையும். கணவன் மனைவி தேகசுகம் மத்திமம், பிதா தேகசுகக் குறைவு, செய் தொழில் மத்திமம், தொழில்ஸ்தானத்தில் தொழில் வேகம் குறைந்து காணப்படும். மாணவர்களுக்கு சிறந்தவாரம், வர்த்தகர்களுக்கு சிறந்த வாரம் அல்ல.

### மீனம்

**பூரட்டாதி-4ஆம் பாதம் உத்தரட்டாதி, ரேவதி**



இந்த ராசியில் பிறந்தவர்க்கு இவ்வாரம் தேகசுகக் குறைவு வைத்தியச் செலவு, உறவின்களால் செலவு, பொது சேவையில் ஈடுபட்டு வீண்பழி கேட்டல் முதலிய தீய பலன்களுடன் வார இறுதி நாட்களில் நோய் நீங்கி தெய்வ வழிபாடு இனசன மகிழ்ச்சியுடன் கழிக்கலாம் மாதா தேக சுகத்துடன், புத்திரா சுகம், திருமணப பேச்சு சமநிலையாக இருக்கும். கணவன் மனைவி தேகசுகக் குறைவு, பிதா தேகசுகக் குறைவு, செய்தொழில் முன்னேற்றம் குறைவு, தொழில்ஸ்தானத்தில் மன நிலை சிறப்பாக இருக்க மாட்டாது. மாணவர்களுக்கு சிறந்த வாரம் வர்த்தகர்களுக்கு சிறந்த வாரம்.

**யாழ். கொக்குவில்**
**இ.சி.இரகுநாதையர் அவர்களின்**
**சகோதரரின் புத்திரர்**
**இ.வெங்கடேச ஐயர்.**

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# விமானப்படைத் தளபதியும் வாகன இறக்குமதி மோசடியில்?

(கொழும்பு)

விமானப்படை முன்னாள் தளபதி ஜயலத் வீரக்கொடி வாகன இறக்குமதியில் மோசடி செய்துள்ளதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. அரச அனுமதியுடன் இவர் வாகனங்கள் கொள்வனவு செய்ய 3.5 மில்லியன் ரூபா ஒதுக்கப் பட்டிருந்தது. ஆனால் இவர் ஏழு மில்லியன் ரூபா தொகைக்கு வாகன இறக்குமதி செய்துள்ளதாக லஞ்ச ஊழல் விசாரணைக்குழு நடாத்திய விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

அண்மையில் வாகன இறக்குமதி மோசடியில் கடற்படை உயரதிகாரியும் சம்பந்தப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (01)

## உண்மையான....

ரிகா தெரிவித்தார்.

தற்பொழுது இலங்கையில் போர் நடைபெறவில்லை என்பதால் சமாதானம் நிலவுகிறது என்ற அர்த்தமாகக் கொள்ள முடியாது என்றும் ஜனாதிபதி அப்பேச்சில் குறிப்பிட்டார்.

விரைவில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க என்ற அதிகாரத்தோடு சில விடயங்களைச் செய்யவேண்டியிருக்கும் என்றும் அவர் அப்போது மேலும் தெரிவித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் மேற்கொண்டுவரும் தனியார் மயமாக்கல் நடவடிக்கைகளை கடுமையாகக் கண்டித்த ஜனாதிபதி, மின்சாரத்துறை போன்ற அத்தியாவசியத்துறைகளை கண்மூடித்தனமாகத் தனியார் மயப்படுத்துவது அபிவிருத்திக்குப் பெரும் பாத்கமாக அமையும் என்றும் கூறினார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்குத் தான் தயாராக இருப்பதாகத் தெரிவித்த சந்திரிகா குமாரதுங்க - சிறிய சிறிய திருத்தங்களை ஏற்றுக்கொள்ள முடியாதென்றும் தனது உரையில் குறிப்பிட்டார்.

## அரசு - புலிகள்....

ரங்களில் தீவிரமாக தலையீடு காட்டுகிறது என்பதே என்று அரசியல் வட்டாரங்களில் பேச்சடிபடுகிறது.

இந்நிலையில் லக்ஷ்மன் கதிர்காமர், பேச்சுவார்த்தைகளில் மையமான முக்கிய விடயங்கள் எதுவும் இன்னமும் அட்டவணைகளில் இடம் பெறாமல் உள்ளது பற்றி ஜனாதிபதி ஆழந்த அக்கறையும் கவலையும் கொண்டுள்ளார் என்று தெரிவித்துள்ளார்.

அரசு அமையப்போகும் விதம், இணைப்பு மற்றும் அலகு பிரிக்கும் விடயம், வடக்கு - கிழக்கு தேர்தல், ஏனைய இனங்களின் மனித உரிமைகளைப் பாதுகாத்தல் என்பனவே பேச்சுக்களில் இடம்பெறவேண்டிய மைய விடயங்களாக இருக்க வேணடுமென ஜனாதிபதி கருதுகிறார் எனக் கதிர்காமர் கூறினார்.

நேற்றுமுன்தினம் ஜனாதிபதி நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சருக்குக் கடிதம் ஒன்றை எழுதியிருந்தார் என்றும் அவர் தெரிவித்தார்.

அக்கடிதத்தில் தனது நெருக்கடியான நிகழ்ச்சி நிரல் காரணமாக நோர்வே உயர்மட்ட தூதுக் குழுவைச் சந்திக்க முடியாது என்றும் சாத்தியமானால் ஒக்ரோபர் 26 ம் திகதி சனிக்கிழமை மாலை 4.30 மணிக்குச் சந்தித்து அரை மணி நேரம் பேச்சுக்களில் ஈடுபட முடியும் என்றும் தெரிவித்தார் என்றும் கதிர்காமர் கூறினார்.

நோர்வேப் பிரதி வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதியுடனான சந்திப்புப் பற்றி ஒரு மேலோட்டமான அட்டவணையொன்றையே கொடுத்திருந்தார் என்றும், மிகக் குறுகிய கால அவகாசத்துடன் அச்சந்திப்புப் பற்றி ஜனாதிபதிக்கு அவர் அறிவித்திருந்தார் என்றும், இதன் காரணமாகவே இந்நிலைமை ஏற்பட்டது என்றும் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்தார்.

நோர்வே உயர் மட்டத் தூதுக் குழுவினர் இலங்கைக்கான விஜயத்தில் - ஜனாதிபதி சந்திக்க விரும்பிய நேரமான சனிக்கிழமை மாலைவரை கொழும்பில் தங்கியிருத்தல் என்ற அடிப்படையில் நிகழ்ச்சி அட்டவணைத் திட்டம் அமையவில்லை என்று நோர்வே வெளிவிவகார அமைச்சுடன் தொடர்புடைய செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

# யாழ்.மாநகர போக்குவரத்து மாற்றங்கள் செய்ய தீர்மானம்

யாழ்.நகர வீதி ஒழுங்கமைப்புத் தொடர்பான கூட்டம் நேற்றுக்காலை 11.30 மணிக்கு மாநகர ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெற்றது. இந்தக்கூட்டத்திற்கு ஆட்டோ உரிமையாளர் சங்கம், வர்த்தகர் சங்கம், தனியார் சிற்றூர்திச் சங்கம், யாழ். பொலிஸ் நிலையப் பொலிஸ் அதிகாரிகள், வடபிராந்திய போக்குவரத்துச் சபை அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

விஸ்தாரம் குறைவாக உள்ள ஸ்ரான்லி வீதியில் தற்போது இரண்டு பக்கமும் வாகனங்கள் விடப்படுவதால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. இப்போக்குவரத்து நெரிசலை தவிர்ப்பதற்காக எதிர்வரும் காலங்களில் வீதியின் ஒரு பக்கம் மட்டுமே வாகனங்களை நிறுத்த ஏற்பாடு செய்வ்தெனவும், இது ஒற்றை நாட்களில் ஒருபக்கமாகவும், இரட்டை நாட்களில் மறுபக்கமாகவும் அமையவேண்டும் எனவும் அங்கு தீர்மானிக்கப்பட்டது.

வடபிராந்திய போக்குவரத்து சபை பஸ் நிலையத்தைச்சுற்றி தற்போது மினிபஸ்கள் தமது இஷ்டப்படி தரித்து நிற்கின்றன. அத்துடன் ஓரிடத்திற்குச் செல்லும் பல பஸ்கள் குறித்த ஒரு இடத்தில் ஒரே நேரத்தில் தரித்து நிற்கின்றன. இதனாலும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. இதைத் தவிர்ப்பதற்காக எதிர்காலத்தில் மினிபஸ் தரிப்பிடத்தை ஸ்ரீலங்கா ரெலிகொம் அமைந்துள்ள பண்ணைப் பகுதிக்கு மாற்றுவததெனவும், அதே நேரம் நகரில் ஒரு நேரத்தில் ஒரு பஸ் மட்டுமே தரித்து நின்று பயணிகளை ஏற்றிச்செல்ல வேண்டும் என்றும், பயணிகள் அங்கே குறைந்திருந்தாலும் குறித்த நேரத்திற்கு அந்த மினிபஸ்கள் புறப்பட்டுச் செல்ல வேண்டும் என்றும், அம் மினி பஸ்கள் சென்ற பின்னரே கண்டிப்பாக அடுத்த பஸ் குறித்த இடத்திற்கு வரவேண்டுமெனவும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் புறப்படும் பஸ்களுக்கு உரிய இடமும் ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது.

சாவகச்சேரி, கொடிகாமம், முகமாலைப் பகுதிகளுக்கான பஸ்கள்- வைரவர் கோயில் வீதிக்கு பக்கத்திலும், பருத்தித்துறை, அச்சுவேலி மற்றும் இராஜவீதியால் செல்லும் பஸ்கள் - விமாகி நிறுவனத்திற்கு முன்னால் - இங்கு 7 பஸ்கள் ஒரே நேரத்தில் தரித்து நிற்க அனுமதிப்பதெனவும், புன்னாலைக்கட்டுவன் பஸ்களுக்கு - விமாகி நிறுவனத திற்கு முன்னால் இடம் ஒதுக்குவதெனவும் - இங்கு ஒரே நேரத்தில் இரண்டு பஸ்கள் தரித்து நிற்க அனுமதிப்பதெனவும், மாதகல், வட்டுக்கோட்டை, பொன்னாலை, காரைநகர் பகுதிகளுக்கான பஸ்கள் - வி.எஸ்.பி.நிறுவனத்திற்கு முன்னால் இடம் ஒதுக்குவதெனவும், இங்கு ஒரே நேரத்தில் 3 பஸ்கள் தரித்து நிற்க அனுமதிப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும் தீவுப்பகுதிகளுக்கான பஸ்களுக்கு - சத்திரத்துச் சந்தியடியில் இடம் ஒதுக்குவதெனவும் - இங்கு ஒரே நேரத்தில் 3 பஸ்கள் தரித்து நிற்க அனுமதிப்பது எனவும், க்ச்சேரி பஸ்ஸிற்கு தற்போதைய இடமான ஹற்றன் நஷனல் வங்கிக்கு முன்னால் இடம் ஒதுக்குவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

துவிச்சக்கர வண்டிகள் நகர்ப் பகுதியில் ஆங்காங்கே அமைக்கப்பட்டுள்ள துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையங்களில் விடுதல் வேண்டும். அதேவேளை - முக்கிய வீதிகளில், அவசரமாக ஓரிரு பொருட்களை வாங்குவோர் கடைகளுக்கு முன்னால் துவிச்சக்கர வண்டிகளை நிறுத்த அனுமதிக்கப்படுவார்களெனவும் தீர்மானிக்கப்பட்டது.

ஆஸ்பத்திரி வீதியில் தரித்து நிற்கும் லொறி ஒவ்வொன்றிற்கும் மணித்தியாலத்திற்கு 5 ரூபா வீதம் கட்டணமாக அறவிடப்படவுள்ளது. லொறிகளில் பொருட்களை ஏற்றும் நேரமாக மு.ப.9 மணி தொடக்கம் பி.ப.1.30 மணிவரை நடைமுறைப்படுத தப்படும். லொறிகளிலிருந்து பொருட்களை இறக்கும் நேரம் பி.ப. மணிக்கு பின்னராகும்.

ஆஸ்பத்திரி வீதியில் - ஆஸ்பத்திரிக்கு முன்பாக உள்ள பாதசாரி கடவையில் இரும்பு குழாயினால் எல்லை அமைத்து பாதசாரிகளை அவ்வழியே நடந்து செல்ல அறிவுறுத்தல் வழங்கப்படவேண்டும்.

முக்கிய இடங்களில் வீதிக் குறியீடுகள் அமைப்பதெனவும் -

வாடகைக் கார், ஒட்டோ என்பன தரித்து நிற்கும் இடமாக வைத்தியசாலைக்கு முன்னால் உள்ள வீதியின் நடுப்பகுதி இருக்க வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

நடைபாதைக் கடைகள் முனீஸ்வரன் வீதிப்பகுதிக்கு இடமாற்றப்பட வேண்டும். இத்தீர்மானத்திற்கமைய, அறிவித்தல் கொடுத்து மரக்கறிச் சந்தையிலிருந்து அவர்களை வெளியேற்றல் வேண்டும் என்றும் நேற்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (13)

## அரசாங்க...

யில், புலிகளின் மூத்த களமுனைத் தளபதியான கேணல் கருணா - பேச்சுக்களில் கலந்துகொள்ளவுள்ளதாகத் தெரியவருகின்றது.

இதேவேளை - பேச்சுக்களுக்கான அரச தரப்புக் குழுவுக்கு அமைச்சர் ஜீ.எல்.பீரிஸே தலைமை தாங்குவது உறுதி செய்யப்பட்டுள்ளது.

புலிகளின் தரப்பில் பேச்சுக்குச் செல்லும் குழுவில் பெரிய மாற்றம் எதுவும் இல்லை எனவும் உருத்திர குமார், ஜோய் மகேஸ்வரன் ஆகியோா வள ஆளணியினராகப் பங்குபற்றுவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

## கும்பலால்...

குளத்தைச் சேர்ந்த அபுரான் லூசியா நட்சத்திரம் (வயது 42) என்ற குடும்பப்பெண் ஆடுகள் மேய்ப்பதற்காக நேற்றுமுன்தினம் வயல் வெளிக்குச் சென்றார்.

ஆடுகளில் ஒன்றைக் காணாத நிலையில் அருகிலுள்ள காடொன்றுக்குள் அதனைத் தேடச் சென்ற சமயம் இவர் காணாமல் போனார்.

இதையடுத்து இன்று இவரது சடலம் இக்காட்டுப்பகுதியில் கண்டெடுக்கப்பட்டது.

இக்காட்டுப்பகுதியில் இராணுவ முகாமொன்றும் சிங்களக் குடியேற்றமொன்றும் இருப்பதாக அப்பகுதி வாசிகள் தெரிவித்தனர்.

சடலம் கண்டெடுக்கப்பட்ட இடத்திற்கு நேரில் சென்ற, வவுனியா மாவட்ட பதில் நீதிவான் எம்.சிற்றம்பலம் மரண விசாரணையை நடத்தினார்.

அதன்பின்னர் நடைபெற்ற மருத்துவப் பரிசோதனையில் குறிப்பிட்ட பெண், ஒன்றுக்கும் மேற்பட்டோரால் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டு, கழுத்து நெரிக்கப்பட்டு கொல்லப்பட்டிருப்பது தெரியவந்திருப்பதாகப் பதில் நீதிவான் தெரிவித்தார்.

தினமும் காலை வேளையில் ஆடுகளை மேய்த்துக் கொண்டு மாலையில் வீடு திரும்பும் வழக்கம் கொண்டவரான இப்பெண்ணின் படுகொலை அப்பிரதேசத்தில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.


## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலாவணிகளுக்கான நாணயமாற்று விகிதங்களின் விபரம் வருமாறு

| | கொள்வனவு விலை (ரூ.ச) | விற்பனை விலை (ரூ.ச) |
|---|---|---|
| 1அமெரிக்க டொலர் | 96.02 | 96.54 |
| 1ஸ்ரேலிங் பவுண் | 148.41 | 149.72 |
| 1யூரோ | 93.37 | 94.40 |
| 1சுவிஸ் பிராங் | 63.59 | 64.41 |
| 1அவுஸ்ரேலிய டொலர் | 52.86 | 53.69 |
| 1ஜப்பானிய யென் | 00.77 | 00.78 |
| 1சவூதி றியால் | 25.69 | 25.69 |

SERENDIB
விமான சேவை
சிறந்த சேவையின் சின்னம் SERENDIB
கட்டணத்தை சிந்தியுங்கள்....!
இலவச பஸ்சேவை விமான நிலையம் வரை,
இரத்மலானை - வெள்ளவத்தை வரை, யாழ்நகர் - பலாலி வரை
3 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு பயணச்சீட்டு இலவசம் !
SERENDIB - MANO
13, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
0777 - 801038, 021 - 2222007, 0777 - 512648.
(சி-080)
SERENDIB EXP
500, காலி வீதி, வெள்ளவத்தை
505632, 500626
மனோஜ்
67/A, WOLFENDALL STREET, COLOMBO - 13
074 - 612656, 01 - 390128, 0777 - 517019

நமக்கென்றோர் மொழி
நமக்கென்றோர் தேசம்
நமக்கென்றோர் பண்பாடு
இப்போ.....
நமக்கென்றோர் தொலைக்காட்சி
அது நம்கையில்
தரணி எங்கும் வாழும் தமிழரின் பிம்பம்



இப்பத்திரிகை - இலக்கம் 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 25-10-2002 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.